பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம்

THE FAITH THAT WAS ONCE DELIVERED TO THE SAINTS

55-0501E

ஞாயிற்றுக்கிழமை மாலை, மே 1, 1955

பிலடெல்பியா சபை, சிகாகோ,
இல்லினாய்ஸ், அமெரிக்கா

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம்
(55-0501E)



இப்போது, நாம் ஒரு நிமிடம் நம் தலைகளைத் தாழ்த்துவோம். எங்கள் பரலோகப் பிதாவே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம், அவர் தேவனுடைய குமாரன், அவர் இந்த உலகத்திற்கு வந்து, நமது பாவங்களையும் அக்கிரமங்களையும் அகற்றுவதற்கும், இந்த அற்புதமான ஜீவனையும் இனிவரும் ஜீவனையும் நமக்குக் கொடுப்பதற்கும் பாவ மாம்சத்தின் ரூபமாக வந்தாரே. அவருக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். இன்றிரவு அவருடைய அனைத்து

ஊழியர்களுக்காகவும், தேசமெங்கும் அவருடைய நாமத்தில் ஊழியம் செய்யும் போதகர்களுக்காகவும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

இன்றிரவு எங்கள் சகோதரர் ஜோசப்பிற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம், தேவனே, நாங்கள் அவரை நேசிக்கிறோம். இப்போது, அவர் தம் வழியில் செல்லும்போது, நீர் அவருடன் செல்வீராக. தேவனே, பரிசுத்த ஆவியானவரால் அவரை நிழலிடுவீராக. உமது கரங்கள் அவர் மீது இருக்கட்டும். கர்த்தரே, அவரைத் தாங்கிக்கொள்ளும், அவர் கழுகுகளைப் போலச் சிறகடித்து எழும்பட்டும். பிதாவே, அதை அருளுவீராக, அவர் திரும்பி வரும்போது, அந்த வெளிநாட்டில் உள்ள பின்தங்கிய மக்களுக்காக, அவருடைய இருதயம் அனல்மூட்டப்பட்டும் வாஞ்சையால் நிரப்பப் பட்டும் எங்களிடம் திரும்புவதாக. பிதாவே, அவருடன் இருங்கள், அவருடைய பிரயாசத்திற்குப் பலனாக ஆத்துமாக்களைக் கொடுங்கள். இயேசுவின் நிமித்தம் இந்த ஆசீர்வாதத்திற்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

இப்போது, அவர் செல்வதற்கு சாத்தியமாக்கிய இங்குள்ளவர்களை ஆசீர்வதிப்பீராக. தேவனே, நீர் அவர்களுடன் இருந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். அவர் சமாதானத்துடன் திரும்பி வரும் வரை அவர்கள் வீட்டில் ஜெப அக்னியை எரியச் செய்வார்களாக. கர்த்தரே, இதை அருளுவீராக. இப்போது எங்களை ஒன்றாக ஆசீர்வதிப்பீராக; எங்கள் பாவங்களை மன்னித்து, இன்றிரவு எங்கள் நடுவில் உமது பிரசன்னத்தின் ஊற்றுதலை எங்களுக்குத் தந்தருளும். தேவனுடைய நேச குமாரனான கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் இதைக் கேட்கிறோம். ஆமென். நீங்கள் அமரலாம், மற்றும்...?...

2 இன்றிரவு சர்வவல்லமையுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைத்து, தேவன் நாம் இங்கு இருப்பதன் மீது தமது ஆசீர்வாதங்களை தங்கப்பண்ணுவார் என்றும், கர்த்தருடைய நாமத்தில் ஊழியம் செய்ய மற்ற வயல்வெளிகளுக்குச் செல்லும் சகோதரர் ஜோசப்புடன் இருப்பார் என்றும் நம்புகிறேன். மேலும் இப்போது, அவர் என்னைப் பற்றிக்

கூறிய அல்லது செலுத்திய பாராட்டுக்கள், அன்பு என்ன செய்யும் என்பதை நீங்கள் பார்க்கலாம். அது திரளான பாவங்களை மூடும். எனவே...

இப்போது, சகோதரர் பேத்ருஸ், எனக்கு அவரை மிக நன்றாகத் தெரியும், அவர் ஒரு மிகச் சிறந்த சகோதரர், அது உண்மை. மேலும் நான்... அவர் தங்கியிருந்தபோது, அங்கு நின்றுகொண்டிருந்தபோது, நமது சகோதரர் ஜோசப் போஸின் அளவிலான ஒரு மனிதர். தேவனுடைய ராஜ்யத்தில் தகுதியற்ற ஒரு நபரான என்னைப் பற்றி அவர் அங்கு நின்று அந்த வார்த்தைகளைச் சொல்வதைக் கேட்கும்போது, நான் அப்படியே கீழே இறங்கி ஒவ்வொருவருடைய பாதங்களிலும் ஊர்ந்து செல்ல முடியும் என்பது போல் எனக்குத் தோன்றுகிறது. நான் வெறுமனே-நான்-நான் நினைக்கிறேன், ஒருவேளை... சரி, ஒருவேளை-ஒருவேளை நான் இருந்திருந்தால்... அமெரிக்காவின் ஜனாதிபதி அந்த இடத்தை எடுப்பதை விட, அந்த வார்த்தைகள் சொல்லப்படுவதைக் கேட்பதையே நான் விரும்புவேன். இயேசு என்னை இரட்சித்தார்,

மேலும்-மேலும் என்னை நேசிக்கிறார் மற்றும் எனக்கு உதவுகிறார் என்று அவர்கள் நம்புகிறார்கள் என்பதை ஒருவருக்குத் தெரியப்படுத்த நான் விரும்புவேன், சரி, அது எனக்கு நித்திய ஜீவனைக் குறிக்கிறது. மேலும் நான்-எனது பார்வையாளர்களை, தேவனுடைய அன்பான பிள்ளைகளை நான் மிகவும் மதிக்கிறேன். என்னை எப்படி வெளிப் படுத்துவது என்று எனக்குத் தெரியவில்லை. என் உணர்வுகளை வெளிப்படுத்த முயற்சிப்பதில் நான் மிகவும் பலவீனமானவன்.

சிறிய கடிதங்களில்... பில்லி சிறிது நேரத்திற்கு முன்பு என் பின்னால் வந்தான். வழியில் வரும்போது, பொதுவாக அவன் என்னிடம் எதுவும் சொல்ல மாட்டான். ஆனால் அவன் சொன்னான், "அப்பா, நீங்கள் வரும்போது, இங்கே உள்ள இந்தக் கடிதங்களை நீங்கள் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்." உங்கள் கடிதங்களை நான் படித்தேன். உங்கள் பரிசுகள் மற்றும் காரியங்கள், தேவன் உங்களுடன் இருப்பாராக. நான் அவை ஒவ்வொன்றையும் மதிக்கிறேன். மேலும் ஓ, நான் உங்களுடன் வாழ்ந்து, இந்தப்

பூமியில் ஊழியம் செய்ய ஒரு நீண்ட காலம் வாழ முடியும் என்றும், பின்னர் மகிமையில் முடிவற்ற யுகங்களினூடே உங்கள் ஒவ்வொரு வருடனும் இருக்க முடியும் என்றும் நம்புகிறேன். அதைச் செய்ய நான் எவ்வளவு வாஞ்சிக்கிறேன்.

3 இப்போது, இன்று பிற்பகல் உங்களிடம் பேசும்போது, இதற்காக எனக்காக ஜெபிக்கும் படி நான் உங்களிடம் கேட்க வேண்டும் என்று நினைக்கிறேன். நான் மிகவும் கடினமாகப் பிரசங்கிக்கும்போது கடுமையாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் இன்று பிற்பகல் நான் பேசிக் கொண்டிருந்தபோது, அந்த குளியல்காரர்களை நிர்வாண முகாம்கள் என்று அழைத்தேன், அதற்காக நான் மன்னிப்பு கேட்பது நல்லது என்று நினைக்கிறேன். நான்-நான்... ஒருவேளை நான் அதைச் சற்று கடுமையாகச் சொல்லியிருக்கலாம், ஒருவேளை தேவன் அதில் பிரியப்படாமல் இருக்கலாம். ஆனால் நான்-அங்கிருந்த குளியல்காரர்களை ஒரு நிர்வாண முகாம் என்று அழைத்ததற்காக நான் மன்னிப்பு கேட்கிறேன், ஏனென்றால் அவர்கள் சில

ஆடைகளை அணிந்திருந்தார்கள். மேலும் நான்-அப்படிச் சொன்னதற்காக நான் வருந்துகிறேன். மேலும் சில சமயங்களில் நான் மிகவும் கலக்கமடைகிறேன், நான்... நான் அமைதியாக இருந்தால், தேவன் அதைக் கவனித்துக் கொள்வார், மேலும் வியாதியுள்ள பிள்ளைகளுக்காக ஜெபிக்க என்னை அனுமதிப்பார். அவர்... அதைச் செய்வது நானல்ல. இது போன்ற காரியங்களில் நான் கோபப்படும் ஒவ்வொரு முறையும், நான் வெறுமனே, நான் வெறுமனே... தேவனுடைய ராஜ்யம் மற்றும் பலவற்றைப் பற்றி நான் பிரசங்கிக்கக்கூடிய வேறு காரியங்கள் இருக்கின்றன என்று தோன்றுகிறது.

இன்றிரவு நான் ஜெபத்தில் கர்த்தரிடம் சொன்னேன்; நான் சொன்னேன், "நான் மீண்டும் சபைக்குச் செல்லும்போது, அதைச் சொன்னதற்காக நான் மன்னிப்பு கேட்கப் போகிறேன், ஏனென்றால் அதைச் சொல்ல எனக்கு எந்த உரிமையும் இல்லை." மேலும்... ஆனால் நான்-நான் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைப் பிரசங்கித்துக்கொண்டே இருக்கி றேன், அது-அதுவே போதும். பார்க்கிறீர்களா?

இப்போது, நீங்கள் அதைப் பின்பற்றுங்கள், நீங்கள்... இதில் உள்ள விஷயம் என்னவென்றால், அந்த மக்களை நியாயந்தீர்க்க எனக்கு வழியில்லை. அவர்கள் இருதயத்தில் என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியாது; தேவனுக்குத் தெரியும். ஆனால் இதோ-நான் உங்கள் எல்லாரையும் நேசிக்கிறேன், அது உங்களுக்குத் தெரியும்.

4 ஆனால் இது என்னவென்றால், நண்பரே: நான் அதை மிகவும் எதிர்க்கிறேன், நீங்கள் அப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறீர்கள் என்று நான் சொல்லவில்லை, நான் உங்களைக் குறிப்பிடுகிறேன் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். ஆனால் நான்-அப்படிச் செய்வதற்கான ஆசை எப்போதாவது வந்தால், அதிலிருந்து விலகி இருங்கள் என்ற எச்சரிக்கையை நான் எப்போதுமே உங்களுக்கு முன்பாக அசைவாட்ட விரும்புகிறேன். அது-அதுதான் முக்கிய விஷயம். நீங்கள் அதைச் செய்வதற்கு முன்பாக உங்களுக்கு ஒரு முன் எச்சரிக்கை அவ்வளவுதான், அதைச் செய்யாதீர்கள். பார்க்கிறீர்களா? அதுதான் வழி, ஆனால் உண்மையில் அது-சகோதரர் ஜோசப்

மற்றும் மற்ற போதகர்கள் போன்றவர்கள் அதைச் செய்ய வேண்டும். நான் அனுப்பப்பட்டேன்... எப்படி இருந்தாலும் ஒரு பிரசங்கியாக நான் ஒரு மாற்று டயர் (spare tire) போன்றவன். எனவே நான் தேவனுடைய வியாதியுள்ள பிள்ளைகளுக்காக ஜெபிக்க அனுப்பப்பட்டேன், எனவே என்னால் முடிந்தால் அதைத்தான் நான் செய்ய விரும்புகிறேன். மேலும் அவருடைய பிள்ளைகளுக்காக ஜெபிப்பதற்காகத்தான் அவர் என்னை அபிஷேகம் செய்து வெளியே அனுப்பினார். அதைச் செய்யக் கிடைத்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். வீட்டில், நான் வீட்டில்கூட ஊழியம் செய்ய விரும்புகிறேன், ஆனால் என்னால் முடியாது.

5 ஒரு... நான் மிகவும் அதிகம்-குறிப்பாக இந்த நேரத்தில், என் மனைவி அவளுடைய நிலையில், நாங்கள்... என் மனைவி நிறைய விஷயங்களை கடந்து செல்ல வேண்டியிருந்தது. அவள் எனக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நின்றாள்; அது லட்சக்கணக்கானவர்கள். பார்க்கிறீர்களா? எனவே முப்பத்தாறு வயதில் அந்த நாள், அவளுடைய தலைமுடி

கிட்டத்தட்ட முழுமையாகப் பனி போன்ற வெண்மையாகிவிட்டது. கவலை, மற்றும் ஏற்றத் தாழ்வுகள் மற்றும் பலவற்றின் காரணமாக அது வந்தது. தேவனே, அவள் அங்கே வரும்போது மகிமையில் அவளுக்கு ஒரு வீட்டைத் தந்தருளும். அவர் தருவார். அவர் தருவார். அதில் நான் திருப்தியடைகிறேன். [ஒரு சகோதரர், "நல்லது, மகிமை!" என்று கத்துகிறார்] எனவே நான்-ஒரு நல்ல மனைவிக்காக நான் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

ஆகவே நான்-நான் நன்றி சொல்வதற்கு நிறைய காரியங்கள் உள்ளன. வீட்டில் எனக்கு இரண்டு அழகான சிறுமிகள் உள்ளனர். அந்தச் சிறுமிகளுக்காக நான் மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன்.

எனக்கு ஒரு இளைஞன், பையன், பில்லி இங்கே எங்கோ உட்கார்ந்திருக்கிறான். பில்லிக்காக நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அவன் இப்போது பதின் பருவத்தில் இருக்கிறான், நிறைய-கவர்ச்சியான காரியங்களில், உங்களுக்குத் தெரியும்,

குழந்தைகளைச் சுற்றியுள்ள காரியங்கள்... அவன் இன்னும் ஒரு பையன். சிறிது நேரத்திற்குப் பிறகு அவன் அதிலிருந்து வெளியே வருவான். தேவன் அவனுடன் இருக்கிறார் என்று எனக்குத் தெரியும். நான் அவனைக் கண்டிருக்கிறேன், தேவனுடைய வரம் அந்தப் பையனின் மீது தங்கியிருப்பதை நான் அறிவேன். அது சரிதான். அவன் தன்னை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தால் மட்டுமே, அவன் பகுத்தறியும் வரிசையின் ஒரு முனையில் நிற்பான், நான் மறுமுனையில் நிற்பேன். அது சரிதான். ஏனென்றால் அது அவனைக் கடந்து செல்கிறது.

6 நாங்கள் ரோட்டில் ஒன்றாகச் செல்லும் போது, அவன் என்னிடம் சொல்வான், "அப்பா, அந்த உணர்வு மீண்டும் வருகிறது. இப்போது, இன்னும் சில நிமிடங்களில், நாம் ஒரு குறிப்பிட்ட காரியத்தைக் கடக்கப் போகிறோம், அது ஒரு குறிப்பிட்ட வழியில் இருக்கும்." அது அப்படித்தான் நடக்கும். பார்க்கிறீர்களா?

மேலும் வீட்டில் எனக்கு ஒரு சிறுமி இருக்கிறாள், அதே போல. சுமார் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு முன்பு அவள்

தனது முதல் தரிசனத்தைக் கண்டாள். அவள் பள்ளி அறையில் அமர்ந்திருந்தாள், அங்கே இயேசு ஒரு மேகத்தின் ரூபத்தில் அவளுக்குத் தோன்றினார் (வெறும் ஏழு வயது சிறுமி), மேலும் தம்முடைய கரங்களை அவளை நோக்கி நீட்டினார். அவளும் வெளியே வர அதிக நாளாகாது என்று நான் நம்புகிறேன், மேலும்... ஓ, நான் நன்றி சொல்வதற்கு நிறைய காரியங்கள் உள்ளன, மிகவும் அதிகம்.

மேலும் சிறந்த பகுதி திரைக்கு அப்பால், அங்கே இருக்கிறது என்பதை அறிந்திருக்கிறேன் (பார்க்கிறீர்களா?), அங்கேதான், நான் உங்கள் அனைவரையும் சந்திக்கும்போது, எல்லையற்ற யுகங்களினூடே அவை சுழன்று செல்லும்போது.

7 இப்போது, நேற்று மாலை, இரண்டு மாலைகளுக்கு முன்பு, சகோதரர் டாம்... அவர் இங்கு சபையில் பேசினாரா? ஆப்பிரிக்காவில் குணமாக்குதலுக்கு மாறிய எனது சகோதரர்களில் ஒருவரான சகோதரர் டாம் தென்னாப் பிரிக்காவிலிருந்து இங்கு பேசினார் (மிகவும் அருமை), அவர்கள் மிஷனரிகளை அனுப்புகிறார்கள், மேலும்... அவர் இங்கு

படங்களைக் காட்டினாரா? அவர் காட்டினாரா, சகோதரர் ஜோசப்? உங்களில் பலர் அந்தப் படங்களைப் பார்த்திருப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன். நிச்சயமாக... இப்போது, அது தென்னாப்பிரிக்காவின் உண்மையான படம். பார்க்கிறீர்களா? அங்குள்ள அந்த ஏழை மக்களைப் பார்க்கிறீர்களா? என்ன ஒரு... ஓ, என், நீங்கள்-அது என் இருதயத்தை இரத்தம் சிந்தச் செய்கிறது, அவர்கள் இரத்தத்தை, வெள்ளாட்டு இரத்தத்தை ஒரு சிலையின் மீது வீசுவதைப் பார்ப்பது, அது நமது ஆசீர்வதிக்கப்பட்ட இரட்சகரின் இரத்தத்திற்கு ஒரு அவமானம் என்பதை அறிவது. மேலும் அவர்களுக்குத் தேவையானது என்னவென்றால், யாராவது வந்து, அவர்களிடம் சொல்ல வேண்டும். ஒரு துண்டுப் பிரசுரத்தின் மூலமாக உங்களால் அவர்களுக்கு ஒருபோதும் சொல்ல முடியாது.

ஓ, ஒரு துண்டுப் பிரசுரம் அல்லது சிறு புத்தகம் ஒரு அற்புதமான மிஷனரி என்று நான் நினைக்கிறேன். ஆனால் அந்த வகையான மக்கள், அவர்களுக்கு நிறைய உளவியல் இருக்கிறது, எனவே... பல ஆண்டுகளாக,

மற்றும் ஆண்டுகளாக, மற்றும் ஆண்டுகளாக, மற்றும் ஆண்டுகளாக அது அவர்களுக்குள் பதிந்திருக்கிறது. ஆனால் அவர்களுக்குத் தேவையானது என்னவென்றால், அங்கே நின்று காரியங்களை நிரூபிக்க, ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட அசைவாடல் ஆகும். அதுதான் கர்த்தருடைய பெரிய வேலையைச் செய்கிறது. பாருங்கள், அவர்கள் எப்போது நம்புகிறார்கள் என்றால்... அவர்கள் நம்புவதற்குப் பார்க்க வேண்டும். பார்க்கிறீர்களா? ஏதாவது நடப்பதை அவர்கள் பார்க்க வேண்டும்.

மேலும் அங்கு ஊழியம் மிகவும் சக்திவாய்ந்ததாக இருக்கிறது. மேலும் தேவன் சகோதரர் ஜோசப்பை அங்கு அபிஷேகம் செய்ய வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன், என் சகோதரருடன் அற்புதமாக பெரிய அடையாளங்களும் அற்புதங்களும் கூடவே செல்லும் வரை. அவர் சென்றிருக்கும் இந்தப் பயணத்தில், அவர் ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களைக் கர்த்தராகிய இயேசுவிடம் ஆதாயப்படுத்துவாராக.

8 சரி, தேவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆவியானவரின் அபிஷேகத்தைப் பிடிக்கும் வரை இப்போது நான் உங்களின் அதிக நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை, சில நிமிடங்கள் உங்களிடம் பேசுகிறேன். அது பிடித்தவுடன், சரி, பிறகு நான்-நான் ஆராதனையை நிறுத்திவிட்டு வியாதியுள்ளவர்களுக்காக ஜெபிக்க ஆரம்பிப் பேன். நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இப்போது, சில நிமிட தியானத்திற்காக நாம் வேதவசனங்களுக்குத் திரும்ப விரும்புகிறோம், வேதாகமத்திற்கு. நான் வார்த்தையை நேசிக்கிறேன். ஓ, நான் அதை வெளிப்படுத்த முடியும் என்று விரும்புகிறேன். எனது சிறந்த பிரசங்கங்களை நான் எங்கே பிரசங்கிக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா? எனது வீட்டில் உள்ள ஜெப அறையில் அல்லது வேறு எங்காவது, படுக்கையில். நான் இரவில் படுத்து, பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் செய்யப்படுகிறேன்; பாதி இரவு எனக்கு நானே பிரசங்கிக்கிறேன். ஓ, பிரசங்க மேடையில் என்னால் அப்படிச் செய்ய முடிந்தால், ஆனால்

நான் மிக விரைவாக, மிக வேகமாகச் செல்கிறேன், சிறிது நேரத்தில் எனக்கு நானே முந்திக்கொண்டு ஓடுகிறேன். அது பதட்டமாக இருப்பதாலும், என் சிந்தனையை இழப்பதாலும் தான் என்று நினைக்கிறேன். ஆனால் என்னை மன்னியுங்கள், அது அதற்கு அருகில் இருக்க வேண்டும், அதற்கு நல்ல குரல் இருக்கிறது, நான்... எனவே நான்... நீங்கள் இருக்கும்போது...

கர்த்தரோடு தனித்திருக்க நீங்கள் விரும்பவில்லையா? என்னே, என்னே, சும்மா தனித்திருங்கள். சில சமயங்களில்... நாங்கள் ஒரு சிறிய பாடலைப் பாடுவோம், "சில சமயங்களில் நான் எனது கர்த்தராகிய கிறிஸ்துவோடு முற்றிலும் தனித்திருக்க விரும்புகிறேன்." நீங்கள் அதை எப்போதாவது கேட்டிருக்கிறீர்களா? எனது எல்லாப் பிரச்சனைகளையும் நான் தனியாக அவரிடம் சொல்ல முடியும். மேலும் அப்படித்தான் அவர் உங்களைப் பெற விரும்புகிறார், தமக்குத் தனியாக. உங்கள் ஜெபங்கள், நீங்கள் இருக்கும்போது அவ்வளவாக இல்லை, ஓ, ஒருவேளை வரும்போது, உங்களுக்குத் தெரியும்,

உதாரணமாக, நீங்கள் சபையில் அல்லது பீடத்தைச் சுற்றி ஜெபிக்கும்போது பொது வெளியில் இருப்பீர்கள். தனித்திருங்கள். நீங்கள் பொதுவெளியில் இருக்கும்போது செய்வதை விட, நீங்கள் தனியாக இருக்கும்போது வித்தியாசமான ஜெபத்தை ஜெபிப்பீர்கள். நீங்கள் அனைவரும் தனியாக நழுவிச் செல்லுங்கள்; வெளியே சென்று ஒரு உண்மையான ரகசிய சந்திப்பு இடத்தைக் கொண்டிருங்கள், அங்கு நீங்களும் கர்த்தரும் ஒரு நாளைக்கு பல முறை சந்தித்து ஜெபிப்பீர்கள்.

9 இன்றிரவு இங்குள்ள பார்வையாளர்களை நான் சுற்றிலும் பார்த்துக்கொண்டிருந்தேன். நான்... யாரை என்னால் அடையாளம் காண முடிகிறது என்று பார்க்கிறேன். எனது நல்ல நண்பர் சகோதரர் பீட்டர்சனை அங்கே பார்க்கிறேன், அவர்-மாநிலத்திற்கு வெளியே இருந்து வந்திருக்கிறார். அது சரிதான். மின்னி-மினியாபோலிஸ், மினசோட்டா... தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரர் பீட்டர்சன், உங்களைப் பார்ப்பதில் மகிழ்ச்சி. மேலும் நான் கதவு வழியாக வரும்போது சில நிமிடங்களுக்கு முன்பு சகோதரர் ஸ்கேக்ஸைப்

பார்த்தேன். நிச்சயமாக லியோவும் ஜீனும் இங்கே... இங்கே அவர் கீழே உட்கார்ந்திருக்கிறார். மேலும் சிறுவர்களை இங்கே பார்க்கிறேன்.

முதியவரான சகோதரர் ரையனைத் தவறவிட்டேன், நாள் முழுவதும் அவரை இங்கே தேடிக்கொண்டிருந்தேன். அந்த நபர் சில நிமிடங்களுக்கு முன்பு அங்கே, "நல்லது, மகிமை!" என்று கத்தினார். அவர் சகோதரர் ரையனாக இருக்கமாட்டாரா என்று பார்க்க நான் அங்கே பார்த்தேன். எனவே நாம் கர்த்தருடைய நற்குணத்திற்காக அவருக்கு நன்றி செலுத்தி துதிக்கிறோம் அல்லவா, அவருடைய அனைத்து... [ஒரு சகோதரர் சகோதரர் பிரன்ஹாமிடம் பேசுகிறார்] ஓ, அது சரியா? சகோதரர் ரையன் கர்த்தரோடு இருக்கச் சென்றுவிட்டார் என்று நான் இப்போதுதான் கேள்விப்படுகிறேன். சரி, என், என். அது என் இருதயத்தின் துக்கம். சரி, தேவன் அவருடைய ஆத்துமாவை இளைப்பாறச் செய்வாராக. தயவுசெய்து என்னுடன் சற்று தலை வணங்குவீர்களா? சகோதரர் ஆர்கனிஸ்ட், ஒரு நிமிடம் ஆர்கனுக்குச் செல்வீர்களா? எனக்கு ஒரு

உதவி செய்வீர்களா? அந்தப் பாடல் உங்களுக்குத் தெரியுமா? ஒரு நாள் நான் கிராமத்து சாலையில் நடந்தேன், அங்கே ஒரு அந்நியரும் பயணம் செய்தார். நீங்கள் அதைக் கேட்டிருக்கிறீர்கள் அல்லவா? மெதுவாக அதை வாசியுங்கள், அது அவருக்கு மிகவும் பிடித்த பாடல்களில் ஒன்று.

10 பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் ஒரு நாள் லுயிஸ்வில்லில் இருந்தேன். ஒரு கூட்டத்தில் அமர்ந்திருந்தபோது, நரைத்த முடி கொண்ட ஒரு வயதான மனிதர் எழுந்து, என்னருகில் வந்து, என்னை அறியாமல் என் மீது கைகளை வைத்து, அந்நிய பாஷைகளில் பேச ஆரம்பித்தார். இது நடந்து இருபது வருடங்கள் நெருங்கியிருக்கும் என்று நினைக்கிறேன். எனக்கு விசித்திரமாக இருந்தது; நான் அப்படிப்பட்டதை ஒருபோதும் கேட்டதில்லை. அவர் சொன்னார், "நீ இப்போது ஒரு பையன் தான், ஆனால் ஒரு நாள் தேவன் உன்னைப் பயன்படுத்தப் போகிறார்." அவர் தான் சகோதரர் ரையன்.

நான் பின்பு மிச்சிகனில் உள்ள டோவாஜியாக் என்ற இடத்தில் உள்ள அவருடைய எளிமையான சிறிய வீட்டிற்குச் சென்றிருக்கிறேன். அவருடைய அன்பான மனைவி, எவ்வளவு பக்தியுள்ள பெண்மணி. சகோதரர் ரையன் ஒரு மனிதர், கர்த்தர் என்னை எங்கும் அழைக்கிறார் என்று கேள்விப்பட்டவுடன், சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும் அவர் புறப்பட்டு விடுவார். மேலும் நான் அவரது மனைவியைச் சந்தித்தேன். நான் ஒரு நாள் ஏரியில் மீன்பிடிக்கச் சென்றுவிட்டுத் திரும்பி வந்தேன், அவள் சொன்னாள், "ஜான் இந்தியானாவில் எங்கோ கீழே சென்றுவிட்டார்." நான் சொன்னேன்... அவர்கள் ஏழைகள் என்று எனக்குத் தெரியும்; மக்கள் அவர்களுக்கு என்ன கொடுக்கிறார்களோ அதை வைத்துத்தான் அவர்கள் வாழ்ந்தார்கள்.

11 சகோதரர் ஜான் ரையன் ஒரு மனமாறிய கத்தோலிக்கர். மாபெரும் ரிங்லிங் பிரதர்ஸ் பார்னம் பெய்லி சர்க்கஸில் ஒரு சவாரி செய்பவராக இருந்தார். அவர் அந்தப் புகழ்பெற்ற கார்லண்டில் சவாரி செய்தார். அவர்

ஒரு சினிமா நட்சத்திரம். அது உங்களுக்குத் தெரியாது, ஆனால் அவர் அப்படி இருந்தார். அதனால்தான் அவருடைய தாடி மாறுவேடத்தில் இருந்தது. அழகான, நல்ல தோற்றம் கொண்ட மனிதர், தன்னை மறைத்துக்கொள்வதற்காக அவர் ஒரு நீண்ட தாடியை அணிந்திருந்தார். அவர் ஒரு சினிமா நட்சத்திரம். அது யாருக்கும் தெரியாது; எனக்குத் தெரியும். அவர் அதை மக்களிடம் சொல்லவில்லை. மேலும் அவர் தனது இளமைப் பருவத்தில் புகழ்பெற்ற கார்லண்டில் சவாரி செய்தார்.

நான் கேட்டேன், "திருமதி. ரையன், சகோதரர் ரையன் உங்களுக்காக ஏதாவது பணம் விட்டுச் சென்றாரா, சகோதரி?"

அவள் சொன்னாள், "இல்லை."

நான் கேட்டேன், "அவர் எப்போது திரும்புவார்?"

அவள் சொன்னாள், "எனக்குத் தெரியாது." அவள் சொன்னாள்...

நான் கேட்டேன், "அது உங்களுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லையா?" நான் ஒரு இளம் பாப்டிஸ்ட் போதகர். நான் கேட்டேன், "அது உங்களுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லையா?"

அவள் சொன்னாள், "ஓ, இல்லை. ஜான் ஒரு தேவனுடைய மனுஷன்; தேவன் அவரை எங்கே நடத்துகிறாரோ, தேவன் என்னைக் கவனித்துக்கொள்வார்." அப்படிப்பட்ட ஒரு விசுவாசமான பெண்மணி. சில வாரங்களுக்கு முன்புதான், அவனுடைய கரங்களில் அவள் கர்த்தரைச் சந்திக்கச் சென்றாள். அவள் அங்கே மிகச் சிறந்த இடத்தைக் கண்டுபிடித்தாள். அவள் அநேகமாக ஜானையும் தன்னுடன் அழைத்திருக்கலாம். மேலும் இன்றிரவு அவர்கள் நமது கர்த்தராகிய இயேசுவின் கரங்களில் ஒன்றாக இருக்கிறார்கள் என்று நான் தேவனை நம்புகிறேன். அவர் இப்போது நமது முன்னிலையில் இருந்து சென்றுவிட்டார், ஆனால் அவருடைய-அவருடைய நினைவுகள் வரும் காலங்களில் என் இருதயத்தில் நிலைத்திருக்கும். நாம் ஜெபிப்போம்.

12 அன்பான பரலோகப் பிதாவே, இந்த சோகமான செய்தியாக... சகோதரர் ரையனை இங்கு சுற்றிலும் தேடிக்கொண்டிருந்தபோது இன்று என் இருதயம் கலங்கியதில் ஆச்சரியமில்லை. அவர் திரைக்கு அப்பால் கடந்து சென்றுவிட்டார். ஒருவேளை அப்போது நான் அதை அறிய வேண்டும் என்று நீர் விரும்பவில்லையோ. அவருடைய வாழ்க்கைக்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். பிதாவே, நாங்கள் அவரை இழப்போம், ஆனால் எது சிறந்தது என்று நீர் அறிவீர். அவர் இந்தச் சபையில் அமர்ந்திருந்தார்; இந்த மக்களுக்கு அவர் பிரசங்கித்தார். தேவன் அவருடைய வீரமிக்க ஆத்துமாவை சமாதானத்தில் இளைப்பாறச் செய்வாராக. அவருக்காக நீர் செய்த எல்லாவற்றிற்கும் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

இன்றிரவு, அவரும் அவருடைய அன்பான மனைவியும் மீண்டும் ஒன்றுசேர வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். இன்றிரவு அவர்கள் ஒன்றாக இருந்தால், அவர்கள் கர்த்தராகிய இயேசுவுடன் மீண்டும் திரும்பி வரும் நாள்

வரை அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருங்கள், பிதாவே. அவர் பிரசங்கித்த சுவிசேஷம் எப்பொழுதும் மக்களின் இருதயங்களில் நிலைத்திருக்கட்டும். அவர் மிகவும் வீரத்துடன் நின்ற அந்த கிறிஸ்துவுக்கு அவர்கள் கீழ்ப்படிந்து நேசிப்பார்களாக, பிரிவே இல்லாத அந்த இடத்தில் நாம் அனைவரும் சந்திக்கும் வரை. கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் இந்த ஆசீர்வாதங்களைக் கேட்கிறோம். ஆமென்.

தேவன் என் வீரமிக்க சகோதரரின் ஆத்துமாவை சமாதானத்தில் இளைப்பாறச் செய்வாராக. யுத்தத்தின் மற்றொரு சிறந்த வீரன் கடந்து சென்றுவிட்டான்.

13 நமது போதக சகோதரர்களே, அதற்கர்த்தம் நமது கவசத்தை நாம் இன்னும் சற்று இறுக்கமாக கட்டிக்கொள்ள வேண்டும் என்பதாகும், இப்போது செய்ய வேண்டிய வேலை இன்னும் கொஞ்சம் இருக்கிறது; அவர்களில் ஒருவர் சென்றுவிட்டார்.

மலர் படுக்கையின் சௌகரியத்தில்,

நான் பரலோக வீட்டிற்குச் சுமந்து செல்லப்பட வேண்டுமா,

மற்றவர்கள் பரிசை வெல்லப் போராடி,

இரத்தக் கடல்களின் வழியே பயணம் செய்திருக்கையில்?

இல்லை, நான் ஆளுகை செய்ய வேண்டுமென்றால் நான் போராட வேண்டும்,

கர்த்தரே, என் தைரியத்தை வர்த்திக்கப்பண்ணும்;

உமது பரிசுத்த வார்த்தையினால் என்னைத் தாங்கிக்கொள்ளும்.

14 இப்போது, யூதாவின் புத்தகம், 3-ஆம் வசனம், தேவனுடைய நித்திய வார்த்தையின் நமது சிறிய பகுதிக்காக நாம் வாசிக்கிறோம். நான் வார்த்தையை நேசிக்கிறேன், நீங்கள் நேசிக்கவில்லையா? அவைகள் ஜீவ வார்த்தைகள், தேவனுடைய ஆசீர்வதிக்கப்பட்ட ஜீவன். நாங்கள் அவைகளை நேசிக்கிறோம், ஏனென்றால் அவைகள் சமாதானத்தைப் பேசுகின்றன. அவைகள் வேதாகமத்திலிருந்து வருகின்றன, நான் யார், நான் எங்கிருந்து

வருகிறேன், நான் எங்கே செல்கிறேன் என்பதை எனக்குச் சொல்லும் ஒரே புத்தகம், அதை நமக்குச் சொல்லும் இருப்பில் உள்ள ஒரே புத்தகம். மேலும் உலகில் உள்ள அனைத்து சிறந்த இலக்கியங்களிலும் எழுதப்பட்ட ஒரே புத்தகம் இதுதான், இதுவே உறுதியான சத்தியமாக உள்ள ஒரே புத்தகம். மற்றவை எவ்வளவு இருந்தாலும்... குறைகள் மற்றும் தோல்விகள் மற்றும் எல்லாமே சிறிய காரியங்களாக இருக்கும், ஆனால் இது ஒருபோதும் தோற்றுப்போகாது. "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை." தேவனுடைய சத்தியம்...

இப்போது, பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு சுமார் முப்பது ஆண்டுகள் கழித்து யூதா சபைக்கு எழுதுகிறார். இந்தக் கடிதம் துல்லியமாக சபைக்கு முகவரியிடப்பட்டுள்ளது.

பிரியமானவர்களே,... (எனக்கு அந்த வார்த்தை பிடிக்கும், உங்களுக்குப் பிடிக்க வில்லையா? பிரியமானவர்களே, எப்படி அவர்-அவருடைய இருதயம் சபைக்குச் செல்கிறது.)...

பிரியமானவர்களே,... பொதுவான இரட்சிப்பைக் குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது.

15 இப்போது, தேவன் தமது வார்த்தையை ஆசீர்வதிப்பாராக. இப்போது, கூட்டத்தின் ஒரு சிறிய அமைப்பு. நான் இது பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் மிகவும் பயபக்தியுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன், ஏனென்றால் நீங்களோடு கூட நானும் நமது சகோதரர் ரையன் இப்போதுதான் சென்ற அந்தப் பாதையில் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே எனக்குப் பின்னால் விட்டுச்செல்லும்போது, நான் சொல்லும் எல்லாமே தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மேலும் ஒவ்வொரு ஆத்துமாவும் பத்தாயிரம் உலகங்களின் மதிப்பில் மதிப்பிடப்படும்போது, ஒரு பார்வையாளருக்கு முன்பாக நிற்கும் ஒரு கிறிஸ்தவப் போதகருக்கு

எவ்வளவு பொறுப்பு இருக்கிறது என்பதையும், ஒருவேளை நாம் அதை ஒரு வழியில் தவறாகப் புரிந்துகொண்டால், தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட ஒரு வார்த்தை தேவனுடைய ராஜ்யத்தில் என்ன செய்யும் என்பதையும் இன்றிரவு நீங்கள் உணருகிறீர்களா? ஆகவே இந்தத் தலைப்பை நான் மிகவும் பயபக்தியுடன் அணுகுகிறேன், இது இன்றைய தினத்திற்கு மிகவும் முக்கியமான ஒரு விஷயமாக இருப்பதால்.

16 இப்போதும், முப்பத்து மூன்று வருடங்களுக்குப் பிறகு யூதா பேசுகிறார், எப்படியென்று சற்று சிந்தித்துப் பாருங்கள்... இன்று நமக்குத் தேவையானது, நான் நம்புகிறேன், முதலாவதாக, நம்மை ஒன்றிணைப்பதற்குப் பழங்காலத்துச் சிறப்பான சில துன்புறுத்தல்களே. சபை உண்மையாகவே துன்புறுத்தப்படும்போது என்பதை நாம் காண்கிறோம்... தேவன் கம்யூனிசம் தேசத்தைத் தாக்க அனுமதிக்கிறார் என்று நான் நம்புகிறேன். பல வருடங்களுக்கு முன்பு கம்யூனிசம் போன்ற அந்த 'இஸங்கள்' (isms) வரை தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் என்பதை,

வேதாகமத்தின் மூலம் என்னால் பகுத்தறிவோடு நிரூபிக்க முடியும் என்று நான் நம்புகிறேன், அவர்கள் முதலில் அந்த N.R.A.-ஐக் கொண்டுவந்தபோது நான்... இப்போது, அதை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்கள். முசோலினி முதன்முதலில் ஆட்சிக்கு வந்தபோது, ஒரு நாள் காலை ஒரு தரிசனத்தின் மூலம்... இப்போது, அது ஒரு பழைய காகிதத்தில் எழுதப்பட்டு, இன்று வீட்டில் இருக்கிறது, அது 1933-ல், '32 அல்லது '33 என தேதியிடப்பட்டுள்ளது.

17 ஒரு நாள் காலை ஞாயிறு பள்ளிக்குச் செல்லும்போது, நான் ஒரு தரிசனத்திற்குள் எடுத்துக்கொள்ளப்பட்டேன். அப்போது நான், "இப்போது..." என்றேன். பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின்கீழ், நான் சொன்னேன், "இப்போது, மூன்று பெரிய இஸங்கள் உருவாகப் போகின்றன. அது இப்போது நடைமுறையில் இருக்கிறது. அவற்றில் ஒன்று ரோமில் இருக்கிறது, அதுதான் பாசிசம், அவற்றில் ஒன்று ஜெர்மனியில் இருக்கிறது, அதுதான் நாசி—நாசிசம். மற்றொன்று ரஷ்யாவில் இருக்கிறது, அதுதான்

கம்யூனிசம்." நான் சொன்னேன், "இந்த மூன்று பெரிய இஸங்களும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலிருந்தும், வலுசர்ப்பங்களிலிருந்தும் மற்றும் பிறவற்றிலிருந்தும் புறப்பட்டுச் சென்ற அசுத்த ஆவிகள், அவை தங்களை ஒன்றாக இணைத்துக்கொண்டு, பேசக்கூடாத காரியங் களைப் பேசி, இறுதியில் அவை அனைத்தும் ஒரே இஸமாக முடியும் வரை ஒன்றையொன்று தாக்கிக்கொள்ளும். அது கம்யூனிசமாக இருக்கும் என்று நான் கணிக்கிறேன். மேலும் கம்யூனிசம் வாடிகன் நகரத்தை சுட்டெரிக்கும்.

பின்பு நான் சொன்னேன், "முடிவுக்காலம் வருவதற்கு சற்று முன்பு..." இப்போது நினைவில் கொள்ளுங்கள், நான் இன்னமும் இதைச் சொல்கிறேன்: "முடிவுக்காலம் வருவதற்கு முன்பு..." இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது. "முடிவுக்காலம் வருவதற்கு முன்பு, இந்த தேசத்தில் ஒரு பெரிய ஆட்சியாளராக ஒரு பெண் வருவாள். அவள் ஒரு ஜனாதிபதியாகவோ அல்லது அந்தப் பதவியிலோ, ஒரு பெரிய பெண்ணாகவோ இருப்பாள். அந்த நேரத்தில், கர்த்தருடைய

வருகைக்கு சற்று முன்பு, மோட்டார் வாகனங்கள் ஒரு முட்டையின் வடிவத்தில் இருக்கும்." இப்போது, அதை நினைவில் கொள்ளுங்கள்; அதை மனதில் வையுங்கள். புரிகிறதா? அது 1932-ல் அல்லது அது போன்ற ஒரு காலகட்டத்தில் நடந்தது. ஒவ்வொரு ஆண்டும் அவை அதற்கு நேராக எப்படி வடிவமைக்கப்படுகின்றன என்பதைப் பாருங்கள். நாம் முடிவுக்காலத்திற்கு அருகில் இருக்கிறோம்; நாம் இருக்கிறோம்.

18 பெரும் துன்புறுத்தல் அனைத்து வேறுபாடுகளையும் உடைத்தெறிந்து நம்மை ஒரே நபராக ஒன்றிணைக்கும். நாம்... எந்த மனிதனும், எந்த மனிதனாலும் அதை ஒருபோதும் செய்ய முடியாது. அது ஒரு மனிதனுக்கு மிகப்பெரிய மா—வேலை; தேவனே அதைச் செய்வார். நாம் என்றாவது ஒரு நாள் ஒன்றாவோம். ஆமென். ஆ, ஆச்சரியமே, அதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன், நீங்கள் மாட்டீர்களா? இவையெல்லாம் முடிவடையும்போது?

இப்போது, இங்கே மக்கள் சிதறடிக்கப் பட்டிருக்கிறார்கள். முப்பத்து மூன்று வருடங்களுக்குப் பிறகு பெந்தெகொஸ்தே என்னும் அந்தப் பெரிய நாளைப் பற்றி நீங்கள் நினைத்துப் பார்ப்பீர்கள். இங்கே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், ஒரு சிறிய அழைப்பு, ஒரு சிறிய வார்த்தை மட்டும். நாம் "பெந்தெகொஸ்தே" என்ற வார்த்தையைத் தவறாக அழைக்கிறோம். நான் அதைப் பற்றி ஒருபோதும் கவலைப்பட்டதில்லை (புரிகிறதா?), அல்லது "பெந்தெகொஸ்தே" என்ற வார்த்தையைப் பற்றி. நாம் பெந்தெகொஸ்தே மக்கள் அல்ல. ஒருபோதும் இல்லை. பெந்தெகொஸ்தே மக்கள் தூஷிக்கிறவர்களாக இருந்தார்கள். நிச்சயமாக, அவர்கள் அங்கு பெந்தெகொஸ்தே நாளில் இருந்தார்கள். சபையல்ல, அவர்களே அங்கு பெந்தெகொஸ்தே ஆராதனையில் இருந்தார்கள். நாம் முதற்பேறானவர்களின் சபையாக இருக்கிறோம். நாமே தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறவர்கள். பரிசுத்த ஆவியினால் நிரம்பியிருந்த அந்த மக்களை கேலி செய்தவர்கள் அந்தப் பெந்தெகொஸ்தே

ஆராதனைக்காரர்கள்தான். பெந்தெகொஸ்தே மக்கள் அல்ல—அது... பெந்தெகொஸ்தே மக்கள் யூதர்களாக இருந்தார்கள், அவர்கள் அங்கே பெந்தெகொஸ்தே நாளில் ஆராதித்துக் கொண்டிருந்தார்கள். இது தேவன் சபைக்குக் கொடுத்த ஒரு புதிய ஏற்பாடாக இருந்தது. எனவே நாம் பெந்தெகொஸ்தே மக்கள் அல்ல. புரிகிறதா? இது புதிதான ஒன்று. அவர்கள் அந்தப் பெயரை அப்படியே அங்கே மாற்றி வைத்துவிட்டார்கள். புரிகிறதா? சரிதான்.

19 ஆனால் கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் சபையின்மேல் வர, அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள், அந்த அப்போஸ்தலர்களும், அந்தப் பெரிய வல்லமைகளும் ஒரு பெரிய எழுப்புதலை நடத்தினார்கள். அது ஒருபோதும் நிற்கும் என்று தோன்றவில்லை. மோசே இஸ்ரவேல் மக்களுடன் செங்கடலைக் கடந்தபோது, தேவன் பரலோகத்திலிருந்து மன்னாவைப் பொழிந்தபோது, அந்த மாபெரும் அற்புதங்களை அவர்கள் மறப்பார்கள் என்பது சாத்தியமாகும் என்று ஒரு நாள்கூட நாம் நினைத்துப் பார்க்கவில்லை. ஆனால் முப்பது அல்லது நாற்பது நாட்களுக்குள் அவர்கள்

எல்லாவற்றையும் மறந்து தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். மக்கள் முதலாவது காரியத்தை எவ்வளவு சீக்கிரம் மறந்துவிடுகிறார்கள் என்று பாருங்கள்.

இப்போது, யூதா அவர்களிடம் சொல்ல முயன்றார்... இப்போது, நீங்கள் வேண்டும் என்று அவர் சொன்னார், நான்... "பிரியமானவர்களே, உங்களுக்கு எழுதும்படிக்கு நான் மிகவும் ஜாக்கிரதையுள்ளவனாயிருந்தேன், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது." இப்போது, இங்குள்ள நாம் ஒவ்வொருவரும் ஒருவேளை மெத்தடிஸ்ட், பாப்டிஸ்ட், பிரெஸ்பிடீரியன், கத்தோலிக்கர் மற்றும் பலவிதமான பிரிவினை சபைகளைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். எனக்கு அது எவ்விதப் பொருளுமற்றது. மறுபடியும் பிறந்திருப்பதன் மூலம் நீங்கள் உங்கள் இருதயத்தில் ஒரு கிறிஸ்தவராக இருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன்.

20 இப்போது, நீங்கள் மறுபடியும் பிறந்திருந்தால், நீங்கள் தேவனுடைய பிள்ளை. இப்போது, இதைக் கவனியுங்கள்: அது நமது சபை என்று சொல்லவே நாம் ஒவ்வொருவரும் விரும்புவோம். நமது சபைதான் விசுவாசத் திற்காகப் போராடும் சபை.

இன்றிரவு நான் ஒரு கத்தோலிக்கரிடம் சென்றால், அவர் சொல்வார், "நிச்சயமாக, நாங்கள்தான் தாய் சபை. பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தைக் கொண்டிருப்பவர்கள் நாங்களே."

நான் அபிஷேகம் பண்ணப்பட்ட சபையான பாப்டிஸ்ட் சபைக்குச் சென்றால், அவர்கள் சொல்வார்கள், "நிச்சயமாக, நாங்கள்தான் அடிப்படை போதகர்கள்; நாங்கள் முழுமையாக அப்போஸ்தல விசுவாசத்தைக் கொண்டி ருக்கிறோம்."

என் தாயின் சபையான மெத்தடிஸ்ட் சபைக்கு நான் சென்றால், இப்போது அவர்கள் சொல்வார்கள், "நிச்சயமாக, நாங்கள்தான் அப்போஸ்தல சபை. பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தை

நாங்கள் கொண்டிருக்கிறோம்." நான் ஒவ்வொரு சபையாகச் செல்கிறேன், ஒவ்வொருவரும் அது அவர்களுடைய சபை என்றே சொல்ல விரும்புவார்கள்.

21 ஆனால் இப்போது, விசுவாசத்திற்காகப் போராட யூதா நம்மிடம் சொல்லியிருக்கிறார், "அந்த" விசுவாசம், "ஏதோ ஒரு" விசுவாசம் அல்ல, பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட "அந்த" விசுவாசம். இப்போது, அதைச் செய்வதற்கு ஒரே ஒரு பகுத்தறிவுள்ள வழிதான் இருக்கிறது, இல்லையா நண்பர்களே, அது மீண்டும் பின்னோக்கிச் சென்று அவர்களுக்கு எத்தகைய விசுவாசம் இருந்தது என்பதைக் கண்டறிவதுதான், பின்பு அவர்களுக்கு எத்தகைய விசுவாசம் இருந்தது என்பதை நாம் கண்டறியும்போது, அதற்காகத் தைரியமாய்ப் போராட வேண்டும்.

இப்போது, ஒரு பாப்டிஸ்டாக, நான் என்னுடையதைக் கீழே வைக்கப் போகிறேன், நீங்கள் யாராக இருந்தாலும் உங்களுடையதைக் கீழே வையுங்கள், வேதாகமம் என்ன

சொல்கிறது என்பதைப் பார்ப்போம், அப்போது நாம் அதைப் பெற்றுக்கொள்ளலாம்.

22 இப்போது, நம்மால் பழைய ஏற்பாட்டிற்குச் செல்ல முடியாது. ஏனென்றால் பழைய ஏற்பாட்டில் அவர்கள் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படவில்லை. புதிய ஏற்பாட்டில்தான் அவர்கள் பரிசுத்தவான்களாக இருந்தார்கள். எனவே, நாம் புதிய ஏற்பாட்டிலிருந்தே தொடங்க வேண்டும். அப்படியானால், புதிய ஏற்பாடு கிறிஸ்தவத்தின் அடிப்படையில் அமைந்தது, அது கிறிஸ்துவிடமிருந்து வந்தது. நாம் போராட வேண்டிய விசுவாசத்தின் முதல் 'நிர்வாகி கிறிஸ்துவே, ஏனென்றால் உலகத்திற்கு அவர் அறிமுகப்படுத்திய விசுவாசம் அதுதான்.

கிறிஸ்து பிறந்தார், கன்னிப்பெண்ணிடம் பிறந்த தேவகுமாரன்... யோவான் நியாயப்பிரமாணத்திற்கும்—மற்றும் கிருபையின் காலகட்டத்திற்கும் இடையில் இருந்தார். லூக்கா 16:16 கூறுகிறது, "நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனவாக்கியங்களும் யோவான்ஸ்நானன் காலவரைக்கும் வழங்கின; அதுமுதல்

தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிறது." யோவான் அவர் வருவதைக் கண்டார், ஒரு சாதாரண மனிதனைப் போலவே.

23 இப்போது, நாம் யோவானிடமிருந்தே இங்கே தொடங்குவோம். இயேசு மனிதரில், உயரத்தில், தோற்றத்தில் அல்லது வேறு எதிலாவது எப்படி வித்தியாசமாகக் காணப்பட்டார்? அவர் வேறு எந்த மனிதனையும் போல காணப்பட்டாரா அல்லது வித்தியாசமாக இருந்தாரா? சரித்திரத்திலோ அல்லது வேதாகமத்திலோ நம்மிடம் உள்ள பதிவின்படி, இயேசு எப்போதாவது பள்ளிக்குச் சென்றதாக ஒரு நாள்கூட அவற்றில் எதுவும் தெரிவிக்கவில்லை. அது ஒருபோதும் அவருடைய பட்டயத்தைப் பற்றி எதையும் கூறவில்லை, அவருடைய கல்வியைப் பற்றி எதுவும் கூறவில்லை. நிச்சயமாக அவருக்கு அது இருந்தது என்று நான் கருதுகிறேன். ஒரு ஏழ்மையான வீட்டில் வளர்க்கப்பட்டதால், ஒருவேளை அவர் இந்த உலகத்தின் பள்ளிக்கல்வியை அதிகம் பெற்றிருக்க மாட்டார்; அது அவருக்குத் தேவைப்படவும் இல்லை.

இப்போது, ஆனால் பன்னிரண்டு வயதில் அவருடைய ஞானம் இறையியல் போதகர்களை குழப்பமடையச் செய்தது. பன்னிரண்டு வயதான இந்தச் சிறுவன், எப்படி, வேதவாக்கியங்களை அங்கே அப்படிப்பட்ட விதமாகச் சுருளவிழ்த்து, அவர்களுக்கு எதுவும் தெரியாத காரியங்களை அவர்களுக்கு நிரூபிப்பார் என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. பாருங்கள், அவர்கள் அதை ஒரு அறிவுசார்ந்த நிலைப்பாட்டிலிருந்து போதித்துக் கொண்டி ருந்தார்கள், இயேசு அதை நேரடி வெளிப்பாட்டினால் அறிந்திருந்தார்.

என் சகோதரனே, சகோதரியே, என் இருதயத்தில் உள்ள முழு அன்போடும் நான் இதைச் சொல்லட்டுமா, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உண்மையான மெய்யான சுவிசேஷம் ஆவிக்குரிய வெளிப்பாட்டினாலேயே கொடுக்கப்படுகிறது, அது மட்டுமே நீங்கள் அதை அறியக்கூடிய ஒரே வழியாகும்.

24 இப்போது, ஏதேன் தோட்டத்தில் காயீனைப் பாருங்கள். காயீன், ஏதேனுக்குத் திரும்பி வந்தபோது, அவனால் எவ்வளவு

முடியுமோ அந்த அளவுக்கு அவன் மதபக்தி உள்ளவனாக இருந்தான். அவன் பூக்கள் போன்றவைகளைக் கொண்டு வந்து, பலிபீடத்தின் மேல் வைத்தான். அவன் நிலத்தின் கனிகளைக் கொண்டுவந்து அவற்றைக் கீழே வைத்தான். அவன் தேவனை விசுவாசித்தான்; அவன் தேவனை ஆராதித்தான்; அவன் தேவனுக்குப் பலியிட்டான்; அவன் தேவனுக்கு ஒரு சபையைக் கட்டினான், அவனால் எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு மதபக்தி உள்ளவனாக இருந்தான்.

ஆபேல் தனக்காக ஒரு பாறையை உருட்டி வந்து தனக்காக ஒரு சபையை அல்லது ஆராதனை இடத்தை உருவாக்கினான். ஆனால் ஆபேல் வந்தபோது, அவன், விசுவாசத்தினால்... விசுவாசம் என்பது ஒரு கற்பனையான காரியம் அல்ல. நீங்கள் அதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். விசுவாசம் என்பது ஒரு நேரடி வெளிப்பாடு. பாருங்கள், நீங்கள் அறிவுப்பூர்வமாக மட்டுமே கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டால், நீங்கள் இன்னும் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. பரிசுத்த ஆவியானவர்

அதை உங்களுக்கு வெளிப்படுத்தும் வரை, இயேசுவே கிறிஸ்து என்று உங்களால் சொல்ல முடியாது. பாருங்கள், அறிவுசார்ந்த விசுவாசம், அது... ஆ, இப்போது அந்த ஒரு குறிப்பை மட்டும் ஒவ்வொரு இருதயத்திற்குள்ளும் ஆழமாகப் பதிய வைக்க முடிந்தால். இப்போது இந்த இடத்திற்காக, நிலைமைக்காக நான் நன்றி கூறுகிறேன். புரிகிறதா? ஆ, இதை மட்டும் உங்களால் பார்க்க முடிந்தால், பல வருடங்களில் நீங்கள் பார்த்ததிலேயே மிகப்பெரிய காரியத்தை நீங்கள் பார்ப்பீர்கள். கேளுங்கள், நான் இங்கே நின்றுகொண்டு இதைச் சொல்வதால் அல்ல, ஆனால் விசுவாசம் என்பது மனதளவில் அறிந்துகொள்ளக்கூடிய ஒன்றல்ல, அது ஒரு வெளிப்பாடு, தேவனுடைய வெளிப்பாடு, விசுவாசத்தினால், அறிவு சார்ந்ததல்ல, அவனுடைய இருதயத்தினால் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடிந்தால்.

25 இப்போது, ஒரு ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர வேண்டும் என்று ஆபேலுக்கு எப்படித் தெரியும்? காயீனைப் போலவே அவனும் அதே தாய் தந்தையரால் வளர்க்கப்பட்டான். ஒரே ஒரு வழி,

காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை அவன் விசுவாசத்தினாலே செலுத்தினான் என்று வேதாகமம் கூறுகிறது, அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தேவசமுகத்தில் அவன் நீதிமானாக்கப்பட்டான், மேலும் இரட்சிப்பின் திட்டம் என்ன என்பதைப் பற்றிய வெளிப்பாட்டை தேவன் அவனுக்குக் கொடுத்தார். அது இரத்தம் சிந்துவதன் மூலமாகவே இருந்தது, சபைகளைக் கட்டி பலியிடுவதன் மூலமாகவோ, அல்லது பெரிய அறிவுசார்ந்த விசுவாசத்தோடு வந்து, "நிச்சயமாக..." என்று சொல்வதாலோ அல்ல.

காயீன் சொன்னான், "தேவனே, நான் உம்மை விசுவாசிக்கிறேன். நிச்சயமாக, நான் இங்கே தலைவணங்குவேன்." நித்தியத்தை எதிர்கொள்ளும் எந்தவொரு மனிதனும், தன்னுடைய நித்திய இலக்கு தேவனிடத்தில் கிருபை பெறுவதில்தான் தங்கியிருக்கிறது என்பதை அறியும்போது, ஒருபோதும் போலியாக வரமாட்டான். எனவே அந்த மனிதன் தேவனுக்கு முன்பாக உண்மையான இருதயத்துடன் வந்து, "ஆண்டவரே, நான்

உம்மை விசுவாசிக்கிறேன். இந்த அழகான பலிபீடத்தை, இந்த அழகான சபையை நான் உமக்கு அர்ப்பணிக்கிறேன். என் பொருளிலிருந்து நான் கொண்டுவருகிறேன், நான் தசமபாகம் செலுத்துகிறேன், என் முழங்காலில் படியிட்டு, யெகோவாவே, உம்மை ஆராதிக்க என் கைகளை உயர்த்துகிறேன். நீர் என்னை ஏற்றுக் கொள்வீரா?" என்றான். அவனால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு மதபக்தி உள்ளவனாக இருந்தான். ஆனால் அவன் நேரடி வெளிப்பாட்டைக் கொண்டிருக்கத் தவறி விட்டான்.

26 ஆனால் தேவனிடத்தில் கிருபை பெற்ற ஆபேல், ஒரு ஆட்டுக்குட்டியைக் கொண்டு வந்தான், அது அழகானது அல்ல, அந்தச் சிறிய பழைய ஜீவனின் கழுத்தைச் சுற்றி ஒரு திராட்சைக்கொடியைக் கட்டி, அதைக் கொல்லும்படி இழுத்து வந்தான். அது கத்திக்கொண்டும் சத்தமிட்டுக்கொண்டும் இருந்தது. அதைப் பாறையின் மேல் தூக்கிப் போட்டு, ஒரு கூர்மையான பாறையை எடுத்து, அது இரத்தம் சிந்தி சாகும்வரை அதனுடைய

சிறிய கழுத்தை வெட்டினான். ஆனால் தேவன் என்ன எதிர்பார்க்கிறார் என்பதைப் பற்றிய ஆவிக்குரிய வெளிப்பாட்டைக் கொண்டு, விசுவாசத்தினால் அவன் அதைச் செய்தான். உங்களுக்குப் புரிகிறதா?

இப்போது, அவர்கள் மறுரூப மலையிலிருந்து கீழே வந்தபோது, நசரேயனாகிய இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்து, "மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்?" என்று கேட்டார்.

அதற்கு சிலர், "நீர் எலியா என்றும், மற்றும் சிலர் நீர் தீர்க்கதரிசி என்றும் சொல்கிறார்கள்," என்றார்கள்.

அவர், "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்றார்.

பேதுரு உடனடியாகப் பேசி, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து," என்றான்.

கவனியுங்கள், அவர் சொன்னார், "யோனாவின் குமாரனாகிய சீமோனே (அதாவது அவனுடைய தகப்பனாகிய யோனாவினால்), நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், 'நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக்கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.'"

27 இப்போது, கத்தோலிக்க சபை அது சிறிய கல்லாகிய பேதுருவின் மேல் கட்டப்பட்டதாகச் சொல்ல விரும்புகிறது. புராட்டஸ்டன்ட் சபை அது மூலைக்கல்லாகிய கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்டதாகச் சொல்கிறது. ஆனால் வேதவாக்கியங்களைப் பாருங்கள்; அது அந்த இரண்டின் மேலும் அல்ல. தேவன் பேதுருவுக்குக் கொடுத்த ஆவிக்குரிய வெளிப்பாட்டின் மேல்தான் அது கட்டப்பட்டிருந்தது. பாறையண்டையில், பலிபீடத்தண்டையில் ஆபேலுக்குக் கொடுத்த அதே காரியம்தான். தேவனுடைய திட்டம்

என்னவென்பதைப் பற்றிய ஆவிக்குரிய வெளிப்பாட்டை அவர் ஆபேலுக்குக் கொடுத்தார். மாம்சத்தினாலும் இரத்தத்தினாலும் அல்ல, ஜெபங்களைச் சொல்வதாலோ அல்லது சபைக்குச் செல்வதாலோ அல்ல, ஆவிக்குரிய வெளிப்பாட்டினாலேயே அவர் பேதுருவுக்குக் கொடுத்தார், "சீமோனே, நீ பாக்கியவான், மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். இந்தக்கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை."

இப்போது, நமக்கு ஏன் இத்தனை வித்தியாசமான பிரிவினைகள் இருக்கின்றன என்று காண்கிறீர்களா? ஒருவர் இதை நம்புவதும், மற்றொருவர் அதை நம்புவதுமாக நமக்கு ஏன் இவ்வளவு குழப்பம் இருக்கிறது என்று காண்கிறீர்களா? ஏனென்றால் ஆவிக்குரிய ரீதியில் வெளிப்படுத்தப்பட்ட சத்தியம் தேவன் ஒருவரின் மூலமாக மட்டுமே வர வேண்டும். வார்த்தையானது ஞானிகளுக்கும் விவேகி களுக்கும் மறைக்கப்பட்டிருக்கிறது. தேவன்

அப்படியே சொன்னார். கற்றுக்கொள்ள விரும்பும் குழந்தைகளுக்கே அவர் அதை வெளிப்படுத்துகிறார். எனவே ஒரு குழந்தையாக இருங்கள், உங்களைத் தாழ்த்தி, "ஆ தேவனே, இதோ நான் இருக்கிறேன். உம்மை எனக்கு வெளிப்படுத்தும். நான் உம்மை நேசிக்கிறேன்," என்று சொல்லுங்கள். தேவன் தம்மை உங்களுக்கு வெளிப்படுத்துவார்; அவர் தம்மைத் தெரியப்படுத்துவார். அதைப் பார்க்கிறீர்களா?

28 கவனியுங்கள். பின்பு யோவான் இயேசு வருவதைக் கண்டபோது, ஒரு சாதாரண மனிதனைப் போலவே, ஒருவேளை சராசரி மனிதனை விட உயரத்தில் எந்த வித்தியாசமும் இல்லாதவராக இருந்தார். அவர் கூட்டத்தின் நடுவே நடந்து சென்றார், யாரும் அவரை அறியவில்லை, பெதஸ்தா குளத்தின் வழியே மற்றும் அதைச் சுற்றிலும் நடந்து சென்றார். சில நேரங்களில் அவர்கள், பரிசேயர்கள் அவரோடு வாக்குவாதம் செய்வார்கள்; அவர் கூட்டத்தை விட்டு நேராக வெளியே நடந்து சென்றுவிடுவார். மற்றவர்களிடமிருந்து அவரை அவர்களால் வேறுபடுத்திக் காண முடியவில்லை; அவர்கள் அனைவரும் தாடி

மற்றும் அங்கிகளை அணிந்திருந்தார்கள்; அதனால் அவர்கள் அனைவரும் ஒரே மாதிரியாகக் காணப்பட்டார்கள், எந்த வித்தியாசமும் இல்லை.

ஆனால் முன்னறிவிப்பாளராக இருந்த யோவான் நின்று பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது... இதன் ஒரு சிறிய சரித்திரமாக, இது உண்மையாக இருக்கலாம், அல்லது இல்லாமல் இருக்கலாம், என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால் அந்த நாளில் சுமார் பதினொரு மணியளவில் அவர் பிரசங்கித்துக்கொண்டிருந்தார் என்றும், நதியின் மறுபுறத்தில் இருந்த ஆசாரியர்களுடன் விவாதித்துக்கொண்டிருந்தார் என்றும் சொல்லப் படுகிறது. எப்படியாயினும், அவர் நதியில் ஞானஸ்நானம் கொடுத்துக்கொண்டிருந்தார் என்பதை நாம் அறிவோம். அவர் திரும்பிப் பார்த்தார், இதோ இயேசு மலையிலிருந்து இறங்கி, யோர்தான் நதிக்கரைக்கு நடந்து வந்துக்கொண்டிருந்தார். யோவான் பார்த்தபோது, உடனே அவரை அறிந்துகொண்டார். அவர், "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி," என்றார். உங்களுக்குப்

புரிகிறதா? "இதோ" என்றால் "உற்று நோக்குவது" என்று பொருள். "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி."

யோவான் புத்தகத்தில் அவர் சொன்னார், "நான் அவரை அறியாதிருந்தேன் (அவர் வேறு எந்த மனிதனையும் போலவே இருந்தார்.), ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்தஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார்." ஆமென்.

29 புரிகிறதா? "யார்மேல் காண்பாயோ," வெளிப்பாடு. யோவான். கூடியிருந்தவர்களைப் பார்த்துச் சொல்லவில்லை. தேவாவியானவரைக் கண்டு, யோவான் சாட்சி கொடுத்தார். யோவான் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார்; அவரை அறிமுகப்படுத்துகிற பாக்கியம் யோவானுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அதைப்பற்றி ஏதாவது அறிந்திருந்த ஒரே நபர் யோவான் மட்டுமே. ஏனென்றால் அது யோவானுக்கு மட்டுமே

கொடுக்கப்பட்டிருந்தது. அவர் சாட்சி கொடுத்து, "தேவாவியானவர் ஒரு புறாவைப்போல இறங்குவதைக் கண்டேன். அது அவர்மேல் வந்தது, அந்தப் புறாவிலிருந்து ஒரு சத்தம் புறப்பட்டு, 'இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்; இவருக்குச் செவிகொடுங்கள்' என்று உரைத்தது," என்றார். ஆ, ஆச்சரியமே, இதோ இருக்கிறது: ஆவிக்குரிய ரீதியில் வெளிப்படுத்தப்பட்ட சத்தியம். வேறு யாரும் அதைக் காணவில்லை. அல்லது அவர்கள் கண்டிருந்தால் வேதம் அதை அறிவிக்கவில்லை. ஆனால் யோவான் சாட்சி கொடுத்தார்.

ஆபேலுக்கு வெளிப்படுத்தப் பட்டதைப் போல, பேதுருவுக்கு வெளிப்படுத்தப் பட்டதைப்போல, இன்றிரவு இங்குள்ள ஒவ்வொரு விசுவாசிக்கும் வெளிப்படுத்தப் படுவதைப்போல, அது யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டது. உங்களால் முடியாத ஒன்று, உங்களால் அதை விளக்க முடியாது. யோவான் எல்லா ஆய்வுகளுக்குள்ளும் சென்று, "இது இப்படித்தான் இருந்தது, இது இப்படித்தான் இருந்தது," என்று சொல்ல

முடியவில்லை. அவர் சொன்னார், "தேவாவியானவரைக் கண்டேன். அது அதை உறுதிப்படுத்துகிறது. மேலும் வனாந்தரத்தில் தேவன் என்னிடம், ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று சொல்லி யிருந்தார், எனவே அது அவர்தான் என்று எனக்குத் தெரியும்." ஆமென். அது அதை உறுதிப்படுத்துகிறது.

30 கவனியுங்கள், அங்கே அவர் நாற்பது நாட்கள் உபவாசித்தும் ஜெபித்தும் வனாந்தரத்திற்குச் சென்றார், அபிஷேகம் பண்ணப்பட்டவராக வெளியே வந்தார். பரிசுத்த ஆவியானவர் அவருக்கு என்ன செய்தார் என்று காண்கிறீர்களா? அவரைத் தனித்திருக்கும்படி வனாந்தரத்திற்குள் துரத்தினார். தேவனுடைய ஆவியால் பிறந்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும், தனிமையாயிருப்பதற்காக உங்களுடைய கூட்டாளிகளிடமிருந்து உங்களை அது விலக்கிச் செல்லும்: ஐக்கியம், உறவாடுதல், வனாந்தரத்தில் தனிமையாக.

பின்பு, கவனியுங்கள். அவர் வனாந்தரத் திலிருந்து வெளியே வந்து பிரசங்கிக்கத் தொடங்கியபோது. அவர் முழு வெளிப் பாட்டைக் கொண்டிருந்தார், ஏனென்றால் அப்போது அவர் தெய்வத்துவமாகவே இருந்தார். தேவன் உலகத்தைத் தம்மோடே ஒப்புரவாக்கிக்கொண்டு கிறிஸ்துவுக்குள் இருந்தார். அவருக்கு நேரடி சாட்சி இருந்தது. யோவான் ஆவியானவரைக் கண்டார். அது அப்படித்தான் இருக்க வேண்டும் என்று இயேசு அறிந்திருந்தார், ஏனென்றால் உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே அந்த நோக்கத்திற்காக அவர் அழைக்கப்பட்டுப் பிரித்தெடுக்கப் பட்டிருந்தார். உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்ப்பதற்காக வந்த தேவகுமாரனாக அவர் இருந்தார்.

31 புறா வடிவில் காணக்கூடிய ஒரு வெளிச்சம் அங்கே... அவர் எவ்வளவு விசுவாசம் கொண்டிருந்தார், அமைதியாக நடந்து சென்றார், அவரைத் துன்புறுத்துகிறவர்கள் எல்லாப் பக்கங்களிலும் இருந்தார்கள், 'தேவதூஷணன், பிதற்றுகிறவன்' என்று அவரைப் பரிகாசம் செய்தார்கள். அவருக்குச்

சொந்தமானவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், தேவன் தமக்குள் இருந்து தம்முடைய இலக்கை நியமிக்கிறார் என்பதைச் சரியாக அறிந்து, அவர் உறுதியாக நடந்தார். ஆமென்.

அங்கே நீங்கள் இருக்கிறீர்கள். தேவனுடைய ஆவியினால் பிறந்த ஒவ்வொரு நபரும், பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் இருக்கிறார் என்பதை அறிந்திருக்கிறீர்கள், உறுதியாக இருங்கள். தேவனுக்கு உங்கள் இலக்கு தெரியும். அவருக்கு முன்பாக அமைதியாக நடங்கள்.

32 இப்போது, அதுதான் பரிசுத்தவான் களுக்கு முதலில் ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தின் ஆரம்பமாக இருந்தது. இயேசு என்ன செய்தார் என்று பார்ப்போம். அப்போது விசுவாசம் என்றால் என்ன என்பதைப் பற்றி நாம் ஒரு நல்ல புரிதலைக் கொண்டிருக்க முடியும். இப்போது, அவர் அதை அறிமுகப்படுத்தினார். யோவான் ஒரு அற்புதம், ஒரு அடையாளம், அல்லது புறா வடிவில் அவர் மீது ஒரு ஒளிவட்டம் மூலமாக அவரை

அறிமுகப்படுத்தினார். அது அவர் மீது இறங்கியது. மேலும் யோவான் ஆவியானவர் சொல்வதைக் கேட்டார், "இப்போது, இந்த வெளிச்சம் யார் மீது இறங்குவதை நீ காண்கிறாயோ, அது அவருக்குள் செல்லும், அவரே மேசியாவாக இருப்பார், ஏனென்றால் அதுதான் மேசியாவின் அடையாளம்." ஆமென். "யோவானே, உனக்கு அதுதான் அடையாளம்; நீ அதைக் காண்பாய்."

33 ஆனால் கிணற்றடியில் இருந்த அந்த ஸ்திரீக்கு, அவளுடைய இருதயத்தில் இருப்பதை அவர் அறிந்திருந்தார் என்பதே அந்த அடையாளமாக இருந்தது. அவர், "நீ போய், உன் புருஷனை அழைத்துக்கொண்டுவா" என்றார்.

அவள், "எனக்குப் புருஷன் இல்லை" என்றாள்.

அவர், "நன்றாகச் சொன்னாய்; உனக்கு ஐந்து புருஷர் இருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய்" என்றார்.

அவள்: "ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன். நமக்குத் தெரியும்," ஓ, என் ஆண்டவரே, எனக்கு அது பிடிக்கும், "நமக்குக் கற்பிக்கப்பட்டிருக்கிறது, மேசியா வரும்போது, விசுவாசத்தை நமக்கு அறிமுகப்படுத்தப் போகிறவர், அவர் இந்தக் காரியங்களைச் செய்வார் என்று நாம் அறிந்திருக்கிறோம். மேசியா வரும்போது அவர் எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார்" என்றாள்.

அதற்கு அவர், "உன்னுடனே பேசுகிற நானே அவர்" என்றார்.

அவள் தன் குடத்தை வைத்துவிட்டு, பட்டணத்திற்குள் ஓடினாள். அவள் ஒரு நீரூற்றில் இருந்து குடித்திருப்பாள். அங்கே அவ்வளவு வித்தியாசம் இருந்தது, "என் இருதயத்தின் காரியங்களை எனக்குச் சொன்ன ஒரு மனுஷனை வந்து பாருங்கள். இவர்தானே அந்த மேசியா? மேசியா வரும்போது, அவர் இந்தக் காரியங்களை அறிவார் என்றுதானே நமக்குக் கற்பிக்கப்பட்டிருக்கிறது? அதுதானே அந்த அடையாளம்?" என்று சொன்னாள்.

34 அதைத்தான் யோவான் கண்டார். பேதுரு என்ன சொன்னார் என்று பாருங்கள். அவர் சபைக்கு சபையை நன்றாக அறிமுகப் படுத்தினார், அப்போஸ்தலர் 2-ம் அதிகாரம். அவர் கூறினார், "இஸ்ரவேலரே, நசரேயனாகிய இயேசுவை, உங்களுக்குள்ளே தேவன் அங்கீகரித்த ஒரு மனுஷனை," எதனால்? "நீங்கள் எல்லாரும் அறிந்திருக்கிறபடி, உங்கள் நடுவில் தேவன் அவர் மூலமாகச் செய்த அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலத்த செய்கைகளினாலும்." பார்க்கிறீர்களா? அதுதான் காரியம். அடையாளங்கள், அற்புதங்கள் மற்றும் பலத்த செய்கைகள் மூலமாக தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துகிறார்.

நிக்கொதேமு அதை நன்றாக வெளிப்படுத்தினார். ஆர்த்தடாக்ஸ் சபைக்கு, அது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. யூதர்களுக்கு அவர்தான் மேசியா என்று தெரிந்திருந்தது. ஆனால் அவர்களால் அவரை ஏற்றுக்கொள்ள முடியவில்லை, ஏனென்றால் அவர்கள் தங்களின் சமுதாய அந்தஸ்தை இழந்துவிடுவார்கள். இயேசு வந்தார், ஒரு நாள் இரவு வீட்டின் மேல்

ஏறினார். நிக்கொதேமு சந்தின் வழியாகக் கீழே வருகிறான். அங்கே பாருங்கள், ஒரு பிரபு ஒரு ஏழையிடம் வருகிறார். "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இட மில்லை." வயதானவர் இளைஞரிடம் வருகிறார். அவர் அவரைச் சந்தித்தபோது அவர் எப்படி இருந்தார்? உலகத்தின் எந்தப் பட்டங்களும் இல்லாத ஒரு மனுஷனிடம், எல்லா விதமான பட்டங்களையும் கொண்ட ஒரு அறிஞர் வருகிறார். மேலும் அவர், "ரபீ, ஆர்த்தடாக்ஸ் சபையாகிய நாங்கள், நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனென்றால், தேவன் ஒருவனுடனேகூட இராவிட்டால், நீர் செய்கிற இந்த அற்புதங்களை அவன் செய்யமாட்டான்" என்றார். அது தீர்க்கப்பட்ட ஒரு உண்மை. ஆமென். நீங்கள் பார்க்கிறீர்களா? "தேவன் ஒருவனுடனேகூட இராவிட்டால், நீர் செய்கிற இந்தக் காரியங்களை அவன் செய்யமாட்டான். அது எங்களுக்குத் தெரியும். அதை நான் விரும்புகிறேன்."

35 ஓ, அவர் என்ன செய்தார்? அப்படியானால் அவர் எத்தகைய விசுவாசத்தை அறிமுகப்படுத்தினார் என்பதை நாம் கண்டறிவோம். அவர் தம்மை ஒரு பெரிய நபர் என்று உரிமை பாராட்டவில்லை. ஆனால் மக்களால் புரிந்துகொள்ள முடியாத ஒரு வல்லமை அவரிடம் இருந்தது. அவரைப் பற்றி ஒரு அன்பு இருந்தது, எல்லோரும் அவருடைய கூட்டங்களில் இருக்க வாஞ்சித்தார்கள். ஆனாலும் அவர் பல முறை பேசுவதில் கூர்மையாக இருந்தார். ஆனாலும், அவர் என்ன சொன்னாலும், மக்கள், சாதாரண மக்கள் அவரை நேசித்தார்கள், அவரோடு தங்கியிருந்தார்கள்.

அவர் அங்கே நின்றுகொண்டிருந்தபோது நாம் கவனிக்கிறோம், ஒரு நாள் பிலிப்பு இரட்சிக்கப்பட்டு, சென்று, நாத்தான்வேலை அழைத்து, அவரை அவரிடம் கூட்டிக்கொண்டு வந்தான். கூட்டத்தில் வெளியே வந்து, அங்கே நின்றுகொண்டிருக்கும்போது, இயேசு அவனைச் சுற்றிலும் பார்த்து, "இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" என்றார்.

அதற்கு அவன், "சரி, ரபீ, என்னை உமக்கு எப்போது தெரியும்?" என்றான்.

அவர், "ஏன், பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன்" என்றார். அறிமுகப்படுத்தப்பட்ட விசுவாசம்.

36 அவர்... கிணற்றடியில் அந்த ஸ்திரீயிடத்தில் இருந்தபோது, அவளுடைய புருஷர்கள் எங்கே இருக்கிறார்கள், அவர்கள் யார்—அல்லது அவள் எத்தனை முறை திருமணம் செய்துகொண்டாள் என்று அவளிடம் சொன்னார். இதுதான் மேசியாவின் அடையாளம் என்று சொன்னார். அதுபோல அநேக காரியங்களை அவர் செய்தார். பின்னர் அவர் செல்வதற்கு முன் அதைத்தான் அவர் அறிமுகப்படுத்தினார்.

ஜெப வரிசையை நாம் அழைப்பதற்கு முன் இப்போது கவனமாகக் கேளுங்கள். ஓ, அந்தக் கடிகாரம்! அவர் இங்கே பூமியில் இருந்த பல நேரங்களில், அவர் செல்வதற்கு முன், "நான் செய்கிற இந்தக் கிரியைகளை நீங்களும் செய்வீர்கள். நான் என் பிதாவினிடத்திற்குப்

போகிறபடியினால், இவைகளைவிட மேன்மை யானவைகளையும் செய்வீர்கள். நீங்கள் உலகமெங்கும் போங்கள்" என்று சொன்னார். கடைசிக் கட்டளை, ஒவ்வொரு ஊழியக்காரருக்கும் கொடுக்கப்பட்ட மாபெரும் கட்டளை: "நீங்கள் உலகமெங்கும் போய், சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்."

சுவிசேஷம் என்றால் என்ன? "அது வார்த்தை" என்று நீங்கள் சொல்கிறீர்கள். அது மட்டுமல்ல. சுவிசேஷம் வார்த்தையோடு மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியானவரால் வார்த்தையின் வெளிப் பாட்டோடும் வந்தது என்று பவுல் கூறினார். வார்த்தையைக் கற்பிப்பது என்பது ஒரு செய்தித்தாள் வாசிப்பதைப் போன்றது.

37 நான்—இந்தியாவில் வந்திறங்கியபோது, மெத்தடிஸ்ட் பிஷப்பும், அவர்களில் அநேகரும் என்னைச் சந்திக்க அங்கே வந்தார்கள். அவர்கள் கூறினார்கள், "சகோதரர் பிரான்ஹாம், இந்தக் காரியங்களைக் குறித்து நாங்கள் கேள்விப் பட்டிருக்கிறோம். நாங்கள் வார்த்தையைப் பிரசங்கித்தோம், ஒருவேளை நீங்கள்

அமெரிக்கர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து அறிந்திருப்பதைவிட இறையியலைப் பற்றி எங்களுக்கு அதிகமாகத் தெரியும், ஏனென்றால் வேதாகமம் ஒரு கீழைக்கத்திய புத்தகம்." அது சரிதான். அவர்கள் சொன்னார்கள், "ஆனால், பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவரை, அதை மீண்டும் உயிர்ப்பிக்கச் செய்யக்கூடிய ஒருவரை நாங்கள் பார்க்க விரும்புகிறோம்." அதுதான். "வேதாகமம் செய்யும் என்று சொல்வதை வெளிப் படுத்தக்கூடிய ஒருவரை நாங்கள் விரும்புகிறோம். நாங்கள்," வேறுவிதமாகக் கூறினால், "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தை நாங்கள் காண விரும்புகிறோம்." அங்கே நீங்கள் இருக்கிறீர்கள்.

38 இப்போது, இயேசு ஒரு குலமரத் தூணைப் போல செல்லவில்லை. ஒரு முறை ஒரு கூட்டத்தாரின் வழியாகச் செல்லும்போது, பாயில் படுத்திருந்த ஒரு மனிதனைக் குணமாக்கி, கூட்டத்தினரை விட்டு விலகிச் சென்றார் என்று இயேசு கூறினார். ஓய்வுநாளிலே இதை அவர் சுமந்து சென்றதைப் பற்றியும் மற்றும் பலவற்றைப் பற்றியும் அவர்கள் ஏன்

அவரைக் கேட்டார்கள், அநேகமாக அவரைப் பார்த்து கேள்வி கேட்டிருக்கலாம். அதற்கு அவர், "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்கிறதை குமாரன் காண்கிறாரேயல்லாமல், தானாய் ஒன்றும் செய்யமாட்டார்" என்றார். அவர் குமாரனுக்குக் காண்பிப்பதை, பிதா சொல்வதையே குமாரனும் செய்கிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், "பிதா எனக்கு ஒரு தரிசனத்தைக் காண்பிக்கும் வரை நான் ஒன்றும் செய்ய முடியாது, அதன் பிறகு பிதா என்னிடம் சொல்வதை நான் செய்கிறேன். அதுவே பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசமாக இருந்தது.

அநேகர் அதைக் கண்டார்கள்; அநேகர் விசுவாசித்தார்கள்; அநேகர் விசுவாசிக்கவில்லை. ஏன், இயேசு சென்று நீண்ட காலத்திற்குப் பிறகு, அவர்கள் சுற்றிலும் உள்ள எல்லாப் பகுதிகளிலிருந்தும் வியாதிக்காரர்களைக் கொண்டு வந்து, எருசலேமின் வீதிகளில் வைத்தார்கள், பேதுருவின் நிழலாவது அவர்கள் மேல் படும்படிக்கு அப்படிச் செய்தார்கள்.

39 அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலண்டையிலே, இயேசு பலமுறை உள்ளேயும் வெளியேயும் கடந்து சென்ற அதே இடத்தில், தன் தாயின் கர்ப்பத்திலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷன் இன்னும் படுத்திருந்தான். இயேசு பலமுறை இந்த வாசலின் வழியாகக் கடந்திருக்கிறார். உங்களுக்குப் புரிகிறதா? பிறகு அவர் சென்ற பின்பு, அவருக்கு எத்தகைய ஊழியம் இருந்தது என்பதை நாம் காண்கிறோம். இப்போது, அவர் சென்ற பின்பு அவர் சபைக்குக் கட்டளையிட்டார்... இது அதிர்ச்சியளிக்கப் போகிறது, அதனால் தயாராக இருங்கள். இதே சுவிசேஷத்தை உலகத்தின் முடிவு வரை கொண்டு செல்லும்படி அவர் சபைக்குக் கட்டளையிட்டார்: "விசுவாசிக் கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள், சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிக்காரர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள்

சொஸ்தமாவார்கள்." விசுவாசியைப் பின்பற்ற வேண்டிய அடையாளங்கள் என்ன என்பதைச் சில வார்த்தைகளில் காட்டுகிறார். அந்த அடையாளங்கள் அப்போஸ்தல காலம் முழுவதும் தொடர்ந்தன. ஆமென்.

40 இயேசு விசுவாசத்தை அறிமுகப் படுத்தினார். ஊழியக்காரர்கள் அதைச் செயல்படுத்துகிறார்கள். முதல் நூறு ஆண்டுகளுக்கு அவர்கள் எழுத்துபூர்வமாக அதைச் செய்தார்கள். பின்னர் லவோதிக்கேயா ஆலோசனைச் சங்கம் நடைபெற்றது, அதன் பிறகு அவர்கள் வெவ்வேறு உபதேசங்களைப் பற்றி நெளியவும் சண்டையிடவும் தொடங்கி, இப்போது வரை அதை உடைத்துப் போட்டார்கள், ஆனால் மாலை நேரம் வருகிறது, சாயங்காலத்திலே வெளிச்ச முண்டாகும் என்று தீர்க்கதரிசி சொன்னார். சுவிசேஷத்தின் வெளிச்சம் அங்கே உதித்தபோது அதைக் காட்டியது. தீர்க்கதரிசி சொன்னார், "அது பகலுமல்ல இரவுமல்லாத ஒரு நாளாக இருக்கும். ஆனால் சாயங்காலத்திலே வெளிச்சமுண்டாகும்." இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பு கிழக்கத்திய மக்கள் மீது சூரியன்

உதித்தபோது... இரவும் பகலும், இருபத்து நான்கு மணிநேரம் அல்லது பன்னிரண்டு மணிநேர சுழற்சிகள், ஒரு பகல் மற்றும் இரவு ஆகியவற்றைப் பற்றிப் பேசுகையில்... முதல் சபையின் மீது அங்கே சூரியன் மீண்டும் உதிக்கத் தொடங்கியபோது, அவர்களிடம் அடையாளங்களும் அற்புதங்களும் இருந்தன, நசரேயனாகிய இயேசு செய்த அதே காரியங்களை, அவர்களும் செய்தார்கள்.

41 பேதுரு, அவர்கள் அவருடைய நிழலில் படுத்திருந்தார்கள். பவுல் மனந்திரும்பினார், முதலில் அவர் விறைப்பாகவும், அகந்தையாகவும், தன்னுடைய விசுவாசத்தில் வைராக்கியமாகவும் (உங்களுக்குப் புரிகிறதா.), வைராக்கியமாகவும் இருந்தார், வலைகளை விரித்தார்: "அந்த வெறியர்களின் கூட்டம், அவர்களுக்கு நான் விஷம் கொடுப்பேன். அவர்களை நான் சிறையில் அடைப்பேன்." தன்னுடைய பெரிய குதிரையின் மீது ஏறிக்கொண்டு, அந்த ஹோலி-ரோலர்ஸ் அனைவரையும் சிறையில் அடைப்பதற்காக, தமஸ்குவை நோக்கிச் சவாரி செய்யத் தொடங்கினார். அதுபோன்ற எல்லாவிதமான

முட்டாள்தனங்களையும் தொடர்ந்து செய்து கொண்டு, சபைக்கு எதிராக வலைகளை விரித்துக்கொண்டு, தான் என்ன செய்யப் போகிறார் என்று பெரிய காரியங்களைச் சொல்லிக்கொண்டு சென்றார், ஏனென்றால் அவருடைய பாக்கெட்டுகளில் பிரதான ஆசாரியரிடமிருந்து கட்டளைகள் இருந்தன, அது மட்டும்தான் அவருக்குத் தெரியும்.

ஒரு நாள் சுமார் பதினொரு மணியளவில் அவர் தனது குதிரையிலிருந்து கீழே விழுந்தார். இப்போது, ஆரம்பத்திலிருந்தே அவர் ஒரு வலிப்பு நோயாளி என்று உலகம் சொன்னது; அவர் அப்படி இல்லை. சர்வவல்லமையுள்ள தேவனுடைய வல்லமைதான் அவரைக் கீழே விழச் செய்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர் சொன்னார், பரம தரிசனத்துக்கு நான் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை—பரம தரிசனம். ஆமென். [ஒலி நாடாவில் காலியான இடம்] நான் அதை நேசிக்கிறேன் நீங்கள் நேசிக்கவில்லையா? பரிசுத்தவான்களுக்கு முதலில் ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைக் கொண்டிருங்கள்.

42 அவருடைய பெயர் அனனியா. அவர் தரிசனங்களைக் கண்டார். ஒரு நாள் அவர் ஜெபித்துக்கொண்டிருந்தார். கர்த்தர் அவரிடம் வந்து சொன்னார், "அனனியாவே, நேர்த்தெருவு என்னப்பட்ட வீதிக்குப் போ. அங்கே பார்வையற்றுப் படுத்திருக்கும் ஒருவனைக் காண்பாய்." அவர், "அவனுடைய பெயர் சவுல்" என்றார்.

அவன் சொன்னான், "ஆண்டவரே, அந்த மனுஷனுக்கு நாங்கள் பயப்படுகிறோம்; அவன் எப்படிப்பட்டவன் என்று நாங்கள் கேள்விப் படுகிறோம்..."

அவர், "இதோ, அவன் ஜெபம் பண்ணுகிறான்" என்றார். அப்போது காரியங்கள் வித்தியாசமாக இருந்தன. "நான் அவனைச் சந்தித்துவிட்டேன், நான் அவனைச் சரி செய்துவிட்டேன், அவனுடைய அகந்தையை எல்லாம் எடுத்துவிட்டேன், கொஞ்ச நேரம் அவனைத் தூசியில் உருட்டிவிட்டேன், அவனுடைய அந்தஸ்தை அகற்றிவிட்டேன். அவன் என்னுடைய செய்தியைச் சுமந்து செல்லப்போகிறான்."

அனனியா தரிசனத்திலிருந்து வெளியே வந்ததும், அவர் தன் கண்களைக் கசக்கிக் கொண்டு, நகரத்து நீரூற்றுக்குக் கீழேயுள்ள தெருவின் வழியாகக் கீழே இறங்கி, தமஸ்கு நதியைக் கடந்து, "நான் தரிசனத்தில் ஏதோ ஒன்றை..." என்று சொல்லிக்கொண்டே செல்வதை என்னால் காணமுடிகிறது. அவர், "அது அதோ அங்கே இருக்கிறது. அதுதான் அந்த இடம்" என்று சொன்னார். அவர் இருந்த இடத்திற்கு நேராக நடந்து சென்று, அவர் மேல் தன் கைகளை வைத்து, "சகோதரனாகிய சவுலே, நீ இங்கே வந்த வழியிலே கர்த்தர் உனக்குத் தரிசனமானார் அல்லவா சவுலே? நான் அதை ஒரு தரிசனத்தில் கண்டேன். நீ குணமடையும்படி உன் மீது என் கைகளை வைக்குமாறு என்னிடம் கூறினார். சவுலே, இன்னும் சில நிமிடங்களில் உன்னுடைய கண்கள் திறக்கப்படப்போகிறது, நீ பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளப் போகிறாய், ஏனென்றால் தேவன் உன்னை வெளியே அனுப்பப்போகிறார், முதலாவது அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரைக் கொடுக்காமல் அவர் யாரையும் அனுப்புவதில்லை" என்று

சொன்னார். அவர்களுக்கு ஆதரவாக எந்தப் பிரிவினரும் அப்போது இல்லை, அவர்கள் கர்த்தரின் மூலமாகவே செல்ல வேண்டியிருந்தது. அவர் அவர்களை அனுப்புவதற்கு முன்பு அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரைக் கொடுக்கிறார். அதுதான் பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம். "சகோதரனாகிய சவுலே, இயேசு உனக்குத் தரிசனமானார் அல்லவா? நான் ஒரு தரிசனத்தைக் கண்டேன் என்று எனக்குத் தெரியும்."

அவர், "ஆம், அனனியா" என்றார்.

அனனியா சொன்னார், "இப்போது, கர்த்தர் என்னிடம் கூறினார். இது ஒரு தரிசனம்; இது நடக்க வேண்டும்." அவர், "ஆண்டவரே, இதோ நான், என் கைகளை அவன் மேல் வைக்கிறேன்" என்றார். உடனே அவனுடைய கண்களிலிருந்து செதில்கள் விழுந்தன. அவர் எழுந்து, நான் கற்பனை செய்து பார்க்கிறேன், அனனியாவின் கையைப் பிடித்துக்கொண்டு, பாலத்திற்குக் கீழே சென்றார்கள், அங்கே தமஸ்கு நதியில் ஞானஸ்நானம் பெற்றார்.

43 அந்தச் சந்திப்பைக் காண நான் விரும்புகிறேன். பவுல் உடனே நேராகச் சென்றார், இறையியல் கல்லூரிக்கு அல்ல, ஆனால் அரேபியாவிற்குக் கீழே சென்று, கர்த்தர் தனக்கு என்ன செய்ய வேண்டும் என்று காட்டுவதற்காக, அங்கே மூன்று ஆண்டுகள் உபவாசித்து ஜெபித்துத் தங்கியிருந்தார்.

இயேசு, அவர் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டபோது, தங்களை மறைத்துக் கொண்டார். பவுல், அவர் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டபோது, தன்னைத் தனிமைப்படுத்திக்கொண்டார், தேவன் அதே விசுவாசத்தை அவருக்கு வெளிப் படுத்தினார். பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் பேதுருவைக் கலந்தாலோசித்தார், அவரும் அதே காரியத்தையே பிரசங்கித்தார் என்பதைக் கண்டுபிடித்தார். பார்க்காமல், அதைப் பற்றி எதுவும் அறியாமல் இருந்தபோதிலும், அவர் அதே விசுவாசத்தைப் பிரசங்கித்தார்.

44 ஒரு நாள் இரவு கடலில், இந்த அப்போஸ்தலனாகிய பவுல், பதினான்கு பகலும் இரவும், அவர்கள் என்றாவது காப்பாற்றப்

படுவார்கள் என்ற நம்பிக்கையெல்லாம் போய்விட்டது, எல்லோரும் கத்திக்கொண்டும் அழுதுகொண்டும் இருந்தார்கள், சாப்பிடாமல், பவுல் கப்பலின் கீழ்ப்பகுதிக்குள் சென்றார், அலைக்கழிக்கப்பட்டு, தண்ணீர் நிரம்பி, மூழ்கத் தயாராக இருந்தது. பவுல் அங்கே கீழே பிரசங்கித்துக் கொண்டிருந்தார், அல்லது ஜெபித்துக் கொண்டிருந்தார், மாறாகக் கீழே ஜெபித்துக்கொண்டிருந்தார், தேவன் ஒரு தரிசனத்தில் அவருக்குத் தரிசனமானார். அவர் மீண்டும் கப்பலின் தளத்திற்கு வந்தார், பார்த்தார், புயல் தன்னால் முடிந்த அளவு கடுமையாக வீசிக்கொண்டிருந்தது, நிலவு இல்லை, நட்சத்திரங்கள் இல்லை. சிறிய பழைய கப்பல், எல்லாம், ஒவ்வொரு முறையும் அது அலையின் அடியில் செல்லும்போது அனைவரும் கத்தினார்கள், "இந்த முறை அது போய்விடும்."

பவுல் சொன்னார், "திடமனதாயிருங்கள்." அல்லேலூயா!

45 இயேசு தாமே சொன்னார் என்று வேதாகமம் கூறுகிறது, விடுதலையைப்

பிரசங்கிக்கவும், இருளில் இருப்பவர்களுக்குச் சிறைச்சாலை கதவுகளைத் திறக்கவும் அவர் அனுப்பப்பட்டார். அதே காரியத்தை அவர் தமது சபைக்கும் கட்டளையிட்டார். சபையே, இங்கேதான் அவர்கள் அதைத் தவற விடுகிறார்கள், கவனியுங்கள்.

நீங்கள் சிறையில் அமர்ந்திருந்தால். காலையில் ஒன்பது மணிக்கு நீங்கள் இறக்க வேண்டும் என்றால். உங்கள் தலையிலுள்ள முடிகள் அனைத்தையும் அவர்கள் சவரம் செய்து, ஒரு பெரிய ஹெல்மெட்டை மாட்டி, இடது பக்கத்தில் உங்கள் சட்டைக்கையை மேலே இழுத்துவிட்டு, வலது காலின் மேல் ஒரு பெரிய பித்தளைப் பட்டையைக் கட்டியிருந்தால். சுவிட்சை இழுப்பதற்காக ஒருவன் தன் கையில் சுவிட்சோடு நின்றுகொண்டிருக்கிறான், உங்களுக்கு முதலில் தெரிந்தது, யாரோ ஒருவர் ஓடிவந்து, "அதைச் செய்யாதீர்கள். எனக்கு அரசாங்கத்திடமிருந்து மன்னிப்பு கிடைத்தது. மாநில ஆளுநர் அவரை மன்னிக்கிறார். அவர் இதைச் செய்ய வேண்டியதில்லை..." என்று சொன்னார். அந்த மனுஷன் தெருவில் இருப்பதைவிட, தன்

தலையில் ஹெல்மெட்டுடனும் தன் கைகளில் பித்தளையுடனும் அங்கே உட்கார்ந்திருப்பதில் மிகவும் சந்தோஷமாக இருக்க முடியும். ஆமென். ஏனென்றால் அவனுடைய மன்னிப்பில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

46 மேலும் இன்று இரவு இங்குள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும், நாம் பிரசங்கிப்பது இந்த விசுவாசத்தைத்தான், பல ஆண்டுகளாக நீங்கள் நம்பிய விசுவாசத் தைத்தான், முதலில் பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைத்தான், இயேசு உங்களை மன்னிப்பதற்காகவும், வியாதி மற்றும் பாவத்தின் சிறை அறைகளிலிருந்து உங்களை வெளியே கொண்டு வருவதற்காகவும் வந்தார் என்பதை உங்களால் அடையாளம் காண முடிந்தால்... உங்கள் மன்னிப்பு இலவசமாகக் கையெழுத்திடப்பட்டுள்ளது. கிறிஸ்து அதைத் தமது சொந்த இரத்தத்தால் கையெழுத்திட்டார். "ஏனெனில் அவர் நம்முடைய மீறுதல் களினிமித்தம் காயப்பட்டு, அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம்."

நீங்கள் விடுதலையாகிவிட்டீர்கள். அவர் எங்கே கையெழுத்திட்டார்? புத்தகம் அவ்வாறு கூறுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகியும் ஒரு வார்த்தைகூட தவறியதில்லை. நூறு பில்லியன் ஆண்டுகள் உருண்டோடினாலும், அது இன்னும் ஒருபோதும் தவறாது. தேவன் ஒருமுறை பேசினால் அவர் அதைத் திரும்பப் பெற முடியாது. நான் பேசலாம், திரும்பப் பெறலாம், நீங்களும் அவ்வாறே செய்யலாம். ஆனால் அவர் ஒருமுறை பேசினால், அது என்றென்றைக்கும் தீர்க்கப்பட்டுவிடும்.

நீங்கள் பயப்படுகிறீர்கள். நீங்கள் பாவத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டியதில்லை; நீங்கள் இனி வியாதியில் கட்டப்பட்டிருக்க வேண்டியதில்லை. அது உண்மை. பரிசுத்த வான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தையே பவுல் பிரசங்கித்தார்.

47 இப்போது, இன்று நாம் எதைத் தத்தெடுத்துள்ளோம்? நாம் வேறு காரியங்களைத் தத்தெடுத்துள்ளோம். ஒரு மேல் அறைக்கு பதிலாக சபையின் அங்கத்துவத்தை நாம் தத்தெடுத்துள்ளோம். பரிசுத்த ஆவியானவரின்

ஞானஸ்நானத்திற்குப் பதிலாக நாம் இறையியலைத் தத்தெடுத்துள்ளோம். தேவன் நம்மைச் செய்யச் சொன்ன காரியத்திற்குப் பதிலாக மற்ற எல்லாவற்றையும் நாம் தத்தெடுத்துள்ளோம். ஏனென்றால், மனிதர்களின் விதிகளுக்கும் கட்டளைகளுக்கும் நாம் செவிசாய்த்திருக்கிறோம்.

ஆனால் அந்த சுவிசேஷ ஒளி கிழக்கே உள்ள அந்தத் தேசத்தில் காலையில் பிரகாசித்த போது. அது இருளாகவோ வெளிச்சமாகவோ இல்லாத ஒரு நாளாக இருந்தது. அது ஒரு மங்கலான நாளாகவே இருந்து வருகிறது. சூரியன் அதன் வல்லமையில் காணப் படவில்லை, ஒரு கலவையான ஒளி, ஒரு மங்கலான நாள். சூரியன் பிரகாசிக்கிறது என்று அவர்களுக்குத் தெரியும், ஆனால் மேகங்கள் அதை அவர்கள் பார்வையிலிருந்து மறைத்துவிட்டன. மக்கள் கூறுவதற்குப் போதுமான விசுவாசத்தைக் கொண்டிருந்தார்கள், "ஆம், இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தார். ஓ, அவர் வெகு தூரம் சென்றுவிட்டார். இரட்சிப்பை நம்புவதற்குப் போதுமானதை நாம் பார்க்க முடிகிறது."

ஆனால் உங்களால் அனைத்தையும் நம்ப முடியவில்லை. அவர்கள் பாதியிலேயே நின்றுவிடுகிறார்கள்.

48 தீர்க்கதரிசியைப் போல. அந்த—அந்த ராஜா சிரியாவின் மேல் ஒரு வெற்றியைப் பெற, வெற்றியைக் குறித்து அவரிடம் கேட்க வந்தபோது. அவர் அவனுடைய கைகள் மேல் தன் கையை வைத்து, "தரையை அடி" என்றார். மேலும் அவன் இரண்டு முறை மட்டுமே அடித்தான். அந்தத் தீர்க்கதரிசி கூறினார், "நீ ஏன் பலமுறை அடிக்கவில்லை? நீ குறைவு பட்டுவிட்டாய். தேவன் உனக்குப் பல வெற்றிகளை அளித்திருப்பார்."

மேலும் சபைக்கே, இன்று இரவு நான் இதை பயபக்தியுடன் சொல்கிறேன். தேவன் தங்களுக்கு வெளிப்படுத்தியதில் சபை குறைவுபட்டு வந்திருக்கிறது, குறைவுபட்டு அடித்திருக்கிறது. அவர்கள் இரண்டு முறை மட்டுமே அடித்தார்கள். நாம் பாவத்திலிருந்து விடுபடலாம்; அது நல்லது. மேலும் நாம் மகிழ்ச்சியாக இருக்கலாம்; அது நல்லது. ஆனால் தெய்வீக சுகத்திற்காக நாம் ஏன்

அடிக்கக்கூடாது? தேவனுடைய வல்லமைக்காக நாம் ஏன் அடிக்கக்கூடாது? வரங்களின் மறுசீரமைப்பிற்காக நாம் ஏன் அடிக்கக்கூடாது? இயேசு நேற்றும், இன்றும், என்றென்றைக்கும் மாறாதவராக இருக்கிறார் என்பதற்காக நாம் ஏன் அடிக்கக்கூடாது? தேவன் தமது கையை நம் கைகள் மேல் வைத்திருக்கும்போது. பாவத்தின் மீதும், நம்மை விடுவிக்க இயேசு மரித்த ஒவ்வொரு காரியத்தின் மீதும் நாம் வெற்றியைப் பெறுவோம். சபை குறைவுபட்டு அடிக்கிறது. அவர்கள் கொஞ்சம் மட்டுமே அடிக்கிறார்கள். ஆனால் அது எந்த நன்மையையும் செய்வதில்லை. நாம் ஒரு முறை, இரண்டு முறை மட்டுமே அடிப்பதைப் போல. நாம் தொடர்ந்து அடிப்போம். கல்வாரி என்பது விடுதலையைக் குறிக்கிறது. கல்வாரி, குறைய அடிக்க வேண்டாம்.

வேதாகமம் கூறும் ஒவ்வொன்றையும், அவருடன் சேர்ந்து சொல்லுங்கள். நீங்கள் அதை எப்படிச் செய்கிறீர்கள்? தீர்க்கதரிசி, அந்தத் தீர்க்கதரிசி தன் கையை அவன் மேல் வைத்திருந்தார். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தில் கிறிஸ்து தமது கையை

உங்கள் மேல் வைத்திருக்கும் வரையில், தொடர்ந்து அடியுங்கள். தேவன் உங்களோடு இருக்கிறார்.

49 கவனியுங்கள், பரிசுத்த ஆவியானவர் இன்றும் அதேபோல எப்படி அசைகிறார் என்று. பவுல் தான் புறப்பட்டுச் செல்லும்போது கூறினார், "நான் போனபின்பு—நான் சென்றபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே புகும்." ஆனால் கேளுங்கள். கலாத்தியர் *1:8:* "நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்."

பின்னர் யூதா கூறினார், "பிரியமானவர்களே, பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப் பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவதற்கு நான் மிகவும் கருத்துள்ள வனாயிருக்கிறேன்." விசுவாசம் என்றால் என்ன என்று பார்க்கிறீர்களா? உங்கள் சபை அதைப்

போதித்து, அதைப் பயிற்சி செய்தால், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அப்படிச் செய்யாவிட்டால், தேவன் வந்து தம்மைக் குறித்துத் தாமே உறுதிப்படுத்தும் வரை தொடர்ந்து ஜெபியுங்கள், உங்கள் மத்தியில் ஒரு காயீன் இருக்கிறான்.

50 ஓ, நான் இங்கேயே தொடர்ந்து செல்ல எவ்வளவு விரும்புகிறேன், ஆனால் என்னால் முடியாது. இஸ்ரவேலைத் தாழ்வாகப் பார்க்கும்—அந்தப் கள்ளத் தீர்க்கதரிசியைக் குறித்து நான் பேச எவ்வளவு விரும்புகிறேன். மேலும் அவன் நினைத்தான், "நிச்சயமாக அந்த மக்கள் கூட்டம் முழுவதும் செம்மறியாடுகளைப் போல வனாந்தரத்தில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அலைந்து கொண்டி ருக்கிறார்கள்," அவன் நினைத்தான், "நிச்சயமாக, தேவன் அந்த மக்களைச் சபிப்பார்." ஆனால் அவர்கள் மத்தியில் ராஜாவின் சத்தம் இருந்தது. பிலேயாமுக்கு அதைப் பார்க்க முடியவில்லை. அவர்களிடையே ஒரு அடையாளம் இருந்தது, ஒரு அடிக்கப்பட்ட கன்மலை மற்றும் ஒரு

வெண்கலச் சர்ப்பம் ஒரு பரிகாரத்தைச் செய்து கொண்டு அவர்களுக்கு முன்பாகச் சென்றது.

மேலும் இன்று இரவு தேவனுடைய சபைக்கும் அது அப்படித்தான் இருக்கிறது, பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப் பட்ட அதே விசுவாசம் இன்று ஒப்புவிக் கப்படுகிறது. கிழக்கு தேசத்தில் சூரியன் உதித்தது. அவர்கள் இறையியலில் அதிலிருந்து விலகி தங்கள் வழியை மெருகூட்டுகிறார்கள். அது பகலோ இரவோ அல்லாத ஒரு நாளாக இருந்து வருகிறது. ஆனால் தீர்க்கதரிசி கூறினார், "சாயங்கால வேளையில்... சூரியன் எங்கே மறைகிறது? மேற்கில். அது எங்கே உதிக்கிறது? கிழக்கில். ஆரம்பத்தில் முதலில் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றவர்கள் யார்? கிழக்கு மக்கள் யார்? யூதர்கள், கிரேக்கர்கள் மற்றும் பல. சூரியன் மறையும் போது கடைசி நாளில் அதைப் பெறுவது யார், அமெரிக்க ஐக்கிய நாடுகள் தான் நாகரிகத்தின் கடைசியாக இருக்கிறது.

சாயங்கால வேளையிலே வெளிச்ச முண்டாகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவால்

அவருடைய அப்போஸ்தலர்களுக்கு ஒப்புவிக்கப் பட்ட அதே ஊழியத்துடன் பரிசுத்த ஆவியானவர் இங்கே இருக்கிறார். மேலும் அவள் ஒரு இருளின் வழியாக வந்திருக்கிறாள், ஆனால் மேகங்கள் விலகித் தெளிவாகின்றன. அதே பரிசுத்த ஆவியானவர் வந்து அதே காரியத்தை வெளிப்படுத்துகிறார். நாம் ஜெபிக்கும்போது தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

51 பரலோகப் பிதாவே, உமது அன்பான குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில், நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். கிறிஸ்தவ வார்த்தைகளில், "எனக்குத் தெரியும்." அதற்காக நாங்கள் அதை மிகவும் நேசிக்கிறோம். இல்லை, "நான் அப்படி யூகிக்கிறேன், அநேகமாக அப்படித்தான்"; அது ஒரு கிறிஸ்தவனின் சாட்சி அல்ல. "எனக்குத் தெரியும்." அப்படித்தான் நாங்கள் செய்கிறோம், பிதாவே, இயேசு தேவனுடைய குமாரன் என்பதை நாங்கள் அறிவோம். அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்பதை நாங்கள் அறிவோம். அவர் நம்மிடையே வாழ்கிறார். மேலும் அவர் பரிசுத்தவான்களுக்கு தம்மால்

ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தை இன்றிரவு நமது மத்தியில் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.

மேலும் இதோ அவர் சாயங்கால வேளையில், உலகின் மேற்குக் கடற்கரையில் அஸ்தமிக்கும்போது, அந்த மக்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றபோது மேல் அறையில் அந்த நாளில் பிரகாசித்த அதே வெளிச்சம் பிரகாசிக்கிறது. மேலும் அதே அடையாளங்களுடனும் அற்புதங்களுடனும் அதே விதமாக, இதோ அதே பரிசுத்த ஆவியானவர் இன்றும் மீண்டும் இறங்குகிறார். பிதாவே, நாங்கள் உம்மை நேசிக்கிறோம், நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம்.

இப்போது எங்களை ஆசீர்வதியும். மேலும் நீர் சொன்னது போல நான் ஊழியம் செய்யச் செல்லும்போது, "நீர் சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு ஈவுகளை அளித்தீர்." நீர் இங்கே இருந்தபோது செய்த அதே காரியங்களைச் செய்ய நீர் திரும்பி வருவீர். மேலும் பிதாவே, முதல் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு எம்மாவுவிலிருந்து

வந்தவர்களைப் போல, அது அதே இயேசு தான் என்பதை அவர்கள் அறிந்திருந்ததால், "நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா," என்று சொல்லிக் கொண்டு இந்த மக்கள் கூட்டம் இன்றிரவு இங்கிருந்து செல்ல வேண்டும் என்று நான் இன்றிரவு ஜெபிக்கிறேன். அவர் பூமியில் இருந்தபோது செய்த அதே காரியங்களைச் செய்தார். மேலும் அவர் தமது ஜீவனை இன்றிரவு இந்தச் சபையில் கூடியிருக்கிற தமது தாழ்மையான ஊழியர்களின் மூலமாக மீண்டும் உருவாக்கக் கடவர், ஏனெனில் நாங்கள் அதை அவருடைய நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

52 நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள மாட்டேன் என்று வாக்குறுதி அளித்தேன். என்னை மன்னியுங்கள். நீங்கள் மிகவும் அன்பான மக்களாக இருக்கிறீர்கள், என்னால் இரவு முழுவதும் உங்களிடம் பேசிக்கொண்டே இருக்க முடியும்.

நான் அவரை நேசிக்கிறேன். ஓ, நான் அவரை எப்படி நேசிக்கிறேன்! இப்போது, அவர்கள் சில ஜெப அட்டைகளைக்

கொடுத்திருக்கிறார்கள், எனவே சில நோயாளிகளுக்காக நாம் ஜெபிப்போம், அவர்களை எப்படியாவது இந்த வழியே கொண்டு வர முடிந்தால் நான் நினைக்கிறேன். அவர்களை நாம் இங்கே கொண்டு வர முடியுமா, சகோதரர் ஜோசப்? அல்லது எப்படியாவது அவர்களைக் கொண்டு வரலாம், நீங்கள் விரும்பும் எந்த வழியிலும், பரவாயில்லை. இந்த வழியே மேலேவா? சரி.

ஜெப அட்டைகளில், எங்களால் முடிந்தால், ஒவ்வொருவருக்காகவும் ஜெபிக்க விரும்புகிறோம். இப்போது, உங்களால் முடிந்தால் நீங்கள் மிகவும் பயபக்தியுடன் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், நீங்கள் மிகவும் நல்லவர்களாக இருந்திருக்கிறீர்கள்.

53 இப்போது, கர்த்தராகிய இயேசு இன்றிரவு இந்தக் காட்சிக்கு வந்தால். இப்போது, நான் உங்களின் ஒரு சகோதரன் மட்டுமே, ஒரு மனிதன். ஆனால் அவர் இன்னும் அதே இயேசுவாகவே இருக்கிறார், அதை நீங்கள் நம்புகிறீர்களா? சரி, அவர் வல்லமையில் அதேபோல, கொள்கையில்

அதேபோல, அன்பில் அதேபோல இருந்தால், ஏன், அவர் அதேபோல வாழ்வார் அல்லவா? ஏனெனில் அவர் கூறினார், "நான்..." அவர் நம்முடன் இருப்பதாக வாக்குத்தத்தம் செய்த இடத்தில், உலகத்தின் முடிவுபரியந்தம் அவர் நமக்குள்ளே இருப்பார் என்று வாக்குத்தத்தம் செய்தார், அது சரியா? மேலும் இந்த உலகம் இங்கே நிலைத்திருக்கும் வரை, சுவிசேஷ யுகத்தின் முடிவு வரை, இயேசு, உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசு நம்முடன், நமக்குள்ளே இருப்பதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இப்போது, நீங்கள் எனக்காக அதைத் தொடங்கிவிட்டீர்களா? 1 லிருந்து எதுவரை? 1 முதல் 100 வரை.

54 சரி, ஜெப அட்டை எண் 1 யாரிடம் உள்ளது? உங்கள் கையை உயர்த்துங்கள், எண் 1. ஜெப அட்டை, எண் 1? ஒருவேளை அவர்கள் வெளியே சென்றிருக்கலாம். எண் 2 யாரிடம் உள்ளது? சிலர் பின்னால் வெளியேறினார்கள்; அது அவர்களாக இருக்கலாம். எண் 2? நீங்கள் ஒன்று முதல் நூறு

வரை என்று சொன்னீர்களா? எண் 3, ஜெப அட்டை எண் 3 இங்கே இருக்கிறதா? ஜெப அட்டை எண் 3...?...சரி நீங்கள்...சரி. சரி, எண் 3. அந்தப் பெண்மணியை இங்கே கொண்டு வாருங்கள். எண் 4? ஜெப அட்டை எண் 4 யாரிடம் உள்ளது? நீங்கள் இங்கே இருக்கிறீர்களா? எண் 5? ஜெப அட்டை எண் 5, எங்காவது உங்கள் கையை உயர்த்துங்கள். அங்கேதானா? எண் 6. சரி, அம்மா. எண் 7, ஜெப அட்டை எண் 7 யாரிடம் உள்ளது? சற்று வேகமாக உங்கள் கையை உயர்த்துவீர்களா? ஜெப அட்டை எண் 7, அங்கே பின்னால் எழும்பிக் கொண்டிருக்கிறீர்களே, அது நீங்கள்தானா அம்மா? ஜெப அட்டை எண் 7? ஜெப அட்டை எண் 7 வைத்திருக்கிற எவராயினும் சற்று வேகமாக உங்கள் கையை உயர்த்துங்கள். அது எங்கே இருக்கிறது?

55 யாரோ அங்கே பின்னால் தங்கள் கையை உயர்த்தினார்கள், மேலே ஒருவரைக் காட்டினார்கள், அது ஏற்கனவே அங்கே இருக்கிறதா? ஜெப அட்டை எண் 7? 6? ஜெப அட்டை எண் 7 யாரிடம் உள்ளது? உங்கள் கையை உயர்த்துங்கள். எண் 8, உங்கள் கையை

உயர்த்துங்கள். இது... அம்மா, உங்களிடம் இருக்கிறதா, இங்கே வெளியே சென்று கொண்டிருக்கிற வெள்ளை நிற தொப்பி அணிந்திருக்கும் இந்தப் பெண்மணி? இந்தப் பெண்மணியிடம் ஜெப அட்டை 8 உள்ளதா என்று பாருங்களேன்; அவள் கையில் ஒரு ஜெப அட்டை வைத்திருக்கிறாள். அது 8 ஆ என்று பாருங்கள். அநேகமாக அவளுக்குக் காது கேட்காமல் இருக்கலாம், அதனால் முடியாது... சரி, 8. 9, ஜெப அட்டை 9 யாரிடம் உள்ளது? நீங்களா? 10, சரி நீங்கள் யார் என்று நான் பார்க்கும்படியாக சற்று வேகமாக உங்கள் கையை உயர்த்துங்கள். ஜெப அட்டை 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20? உங்களிடம்—உங்களிடம் 20 உள்ளதா? சரி, அது நன்று. சரி.

இப்போது, அங்கே எத்தனை பேர் நமக்குக் கிடைக்கிறார்கள்? எத்தனை பேர் நின்றாலும் பரவாயில்லை, வெறுமனே, ஆஹா, நாங்கள் கவலைப்பட மாட்டோம் நாங்கள் வெறுமனே, நீங்கள் பலரைத் தங்கள் கால்களில் நிற்க வைக்க விரும்பமாட்டீர்கள், ஏனென்றால் அதற்குச் சற்று நேரம் எடுக்கும். பரிசுத்த

ஆவியின் அபிஷேகம் நம் மத்தியில் வருமானால், அது உருளும், சற்று மெதுவாகச் செல்லும். ஆனால் தேவன் என்ன சொல்வார் என்பதை நாம் காத்திருந்து தான் பார்க்க வேண்டும் (நீங்கள் பார்க்கிறீர்களா?). எங்களுக்குத் தெரியாது, அப்படி நடக்காவிட்டால் வரிசையாக நான் மக்களைத் தொடர்ந்து அழைத்து, அவர்களுக்காக ஜெபித்துக்கொண்டே இருப்பேன்.

56 இப்போது, இது தெரியவரட்டும், அதாவது... இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்துவிட்டார், மேலும் எந்த ஒரு பிரசங்கியாரும் அல்ல, எந்த வகையான மனிதரும் அல்ல, ஆனால் கிறிஸ்து தாமே தமது சபையில் வாழ்கிறார் என்று நான் சொல்வதை உங்களில் எத்தனை பேர் மிகத் தெளிவாகக் கேட்கிறீர்கள். நான் அதைச் சொல்வதைக் கேட்கிற எத்தனை பேர், "ஆமென்" என்று சொல்லுங்கள். [சபையார் கூறுகிறார்கள், "ஆமென்."] எங்கெல்லாம் இரண்டு அல்லது மூன்று பேர் கூடுகிறார்களோ, "நான் அவர்கள் நடுவே இருப்பேன்" என்று வாக்குத்தத்தம் செய்து, அவர் இன்றிரவு இங்கே இருக்கிறார்.

இப்போது, அவர் இங்கே இருந்தால், சமாரியாவின் கிணற்றருகே புறஜாதிப் பெண்ணுக்கு அவர் காட்டிய அதே அடையாளத்தை, அல்லது யோவானுக்கு அவர் செய்தது போல அவர் இந்த மக்கள் கூட்டத்திற்குக் காட்டுவார். அது இயேசு செய்த அதே காரியங்களின் ஒரு மேசியாவின் அடையாளமாக இருக்கும், அதை அவர் மீண்டும் செய்வார். அவர் அதைச் செய்வாரானால், அவர் இருக்கிறார் என்று நீங்கள் மகிழ்ந்து சந்தோஷத்துடன் செல்வீர்களா?

சரி, நான் உங்களிடம் கேட்கப்போகிறேன், தயவுசெய்து அங்கும் இங்கும் நகர வேண்டாம். இப்போது, இந்த நேரத்தில் என் இடத்தில் உங்களை இங்கே வைத்துப் பாருங்கள். இங்கே வர முயன்று பாருங்கள்; நீங்கள் விரும்பினால் அதைச் செய்ய உங்களை வரவேற்கிறேன். பார்க்கிறீர்களா? நேராக மேலே வாருங்கள். தேவன் உங்களுக்குச் சொல்லியிருந்தாலொழிய, நீங்கள் துணிய மாட்டீர்கள். ஏனென்றால், ஏதோ தவறாக இருக்கிறது என்பதை நீங்கள் கண்டுபிடிப்பதற்கு, ஒரு கணம்கூட ஆகாது.

பார்க்கிறீர்களா? மக்கள் கூட்டமும் அதை அறிந்துகொள்வார்கள்.

57 இப்போது, இன்றிரவு உங்களுக்காக ஜெபிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறவர்களில், ஜெப அட்டைகள் இல்லாத, ஆனால் உங்களுக்காக ஜெபிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிற எத்தனை பேர் அங்கே இருக்கிறீர்கள்? இயேசு உங்களைப் பார்க்கும் படியாக உங்கள் கையை உயர்த்துங்கள். சரி, அது நன்று.

சரி, இப்போது உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள். தேவன் மேல் விசுவாசமாக இருங்கள். சந்தேகப்பட வேண்டாம். சரி, ஒவ்வொருவரும் பய பக்தியுடன் இருங்கள். இப்போது, நீங்கள் இருங்கள்... இப்போது, பாருங்கள். பரிசுத்த வான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட இயேசுவின் விசுவாசம், அவர் மக்களின் மத்தியில் நின்றபோது, மக்களுக்கு ஏதேனும் தவறாக இருந்தால், அவரால் அதைக் கூற முடிந்தது அல்லவா? யாராவது அவரை விசுவாசத்தோடு தொட்டால், அவர்கள்

தொட்டார்கள் என்று அவர் அறிந்திருந்தார், ஒரு நாள் கலிலேயாவிலிருந்து வரும் நதியிலிருந்து அநேகர் அறிவுப்பூர்வமான விசுவாசத்தைக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஒரு பெண் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள், பின்னர் கூட்டத்திற்குள் ஓடிவிட்டாள், அவள் அங்கே வெளியே நின்றாள். மேலும் இயேசு, அதைச் செய்தது யார் என்று தெரியாமல், திரும்பிப் பார்த்து, "என்னைத் தொட்டது யார்?" என்றார். அவர், "என்னைத் தொட்டது யார்?" என்ற கேள்வியைக் கேட்டார். தேவன் அப்படிச் சொல்வார் என்பதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா?

58 உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா, ஒரு குருடரான தீர்க்கதரிசி எழுந்து உட்கார்ந்திருப்பதையும், மேலும் அவரைச் சுற்றிலும் ஆட்டுத் தோலைப் போர்த்திக் கொண்டு அவருடைய சொந்த குமாரனே, அதுபோல, "நான் யாக்கோபு. நான் ஏசா," என்று அதற்குப் பதிலாகச் சொல்வதையும். அவர் அவனைத் தொட்டுப் பார்த்தார்; அவர் சொன்னார், "ஏன், இது ஏசாவைப் போல உணருகிறது, ஆனால் இது யாக்கோபின்

சத்தத்தைப் போல ஒலிக்கிறது," என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தார். மேலும் தேவனுடைய ஆசீர்வாதம் அவன் மேல் தங்கியது, மேலும் அவன் ஒரு தீர்க்கதரிசியை ஏமாற்றினான்.

ஒரு மனிதன் இரத்தம் தோய்ந்த அங்கியுடன் திரும்பி வந்து, அங்கே சில சிங்கங்கள் சாப்பிட்டுவிட்டன, கொடிய மிருகம்-மிருகம் உங்கள் குழந்தையைக் கொன்றுவிட்டது என்று கூறுவதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா. மேலும் வருஷத்திற்குப் பின் வருஷமாக, வருஷத்திற்குப் பின் வருஷமாக, அந்தத் தீர்க்கதரிசிக்கு வேறு எதுவும் தெரியவில்லையா? மேலும் அதே மனிதன் தனது மரணத் தருவாயில் ஒரு படுக்கையில் உட்கார்ந்து, தன் கால்களைப் படுக்கையில் சுருட்டி வைத்துக்கொண்டு, அந்தப் பிதாக்களை ஆசீர்வதித்து, அவர்கள் இன்றும் இருக்கிற அதே இடத்தில் சரியாக அவர்களை நிலைநிறுத்தினார். அதைப் பார்க்கிறீர்களா? ஆமென்.

இயேசு கேட்டார், "என்னைத் தொட்டது யார்?"

ஏன், பேதுரு சொன்னான், "ஆண்டவரே, முழு கூட்டமும் உம்மைத் தொட முயற்சிக்கிறதே."

"ஆம்," என்றார், ஆனால், "அது ஒரு வித்தியாசமான தொடுதல்," என்றார். அவர் சுற்றிலும் பார்த்து, "என்னிலிருந்து வல்லமை புறப்பட்டுப் போய்விட்டது, நான் பலவீனமடைகிறேன்," என்றார்.

நான் இப்படிச் சொல்வதைக் கற்பனை செய்து பார்க்க முடியும், "இப்போது பாருங்கள், அவர் தேவனாக இருந்தால், அவரிடம் புனிதமான ஏதேனும் இருந்தால், அவர் ஏன் பலவீனமடைய வேண்டும். அது முட்டாள்தனமானது." ஆனால் வல்லமை புறப்பட்டுப்போனது என்று வேதாகமம் கூறுகிறது; அதுதான் பலம். கூறினார், "என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்." அவர் சுற்றிலும் மக்கள் கூட்டத்தைப் பார்த்தார்; அவர் அந்தச் சிறிய பெண்ணைக் கண்டார். அவர் கூறினார், "இப்போது, நான் அல்ல, பிதாவும் அல்ல, ஆனால் உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது."

அது சரியா? அவளுடைய இரத்தப்போக்கு நின்றுவிட்டது. ஏனெனில் அவள் அதைத் தன் முழு இருதயத்தோடும் விசுவாசித்தாள்.

59 இப்போது, அதே இயேசு, அவர் அறிமுகப்படுத்திய விசுவாசம் அதுதான். மேலும் பேதுரு ஒரு முறை பிரசங்கித்தபோது, அல்லது பவுல் அங்கே முடவனாக உட்கார்ந்திருந்த ஒரு மனிதனைக் குனிந்து பார்த்து, "நீ சுகமடையத்தக்க விசுவாசம் உனக்கு உண்டென்று நான் காண்கிறேன்; உன் கால்களூன்றி நிமிர்ந்துநில்," என்றார்.

பேதுரு, அவனுக்கு மற்றொரு சம்பவம். அனனியா, சப்பீரா உள்ளே வருகிறார்கள்; அவர்களுடைய இருதயத்தின் அந்த ரகசியம் அவனுக்குத் தெரிந்திருந்தது. கேட்டான், "பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?" அவர்கள் அதை இரகசியமாகச் செய்தார்கள், ஆனால் அவனுக்கு அது தெரிந்திருந்தது. ஏன்? பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப் பட்ட விசுவாசம் அதுதானா? மேலும் மக்கள் தேவனுக்குப் பயந்தார்கள். ஓ, நீங்கள்

தேவனுக்குப் பயப்படாதபடிக்கு, நண்பர்களே, உங்கள் இருதயம் ஒருபோதும் கடினப்பட அனுமதிக்காதீர்கள். அவர் இப்போது உங்களை ஆசீர்வதிப்பாராக.

60 இப்போது, சிலரை வரிசையில் நிற்க வைத்திருக்கிறோம், சுமார் இருபத்தைந்து பேர் என்று நான் நினைக்கிறேன். ஹா? என்ன சொல்கிறீர்கள்? ஜெப அட்டை எண் 1, அது இந்தக் கட்டடத்திற்குள் இருக்கிறதா? எல்லோரும் சுற்றிலும் பாருங்கள்; யாராகவாவது இருக்கலாம்... பாருங்கள், இங்கே ஒரு நாற்காலியில் ஒரு பெண்மணி அமர்ந்திருக்கிறார். 1, 2. அல்லது காது கேளாத, கேட்க முடியாத ஒருவராக இருக்கலாம். சுற்றிலும் பாருங்கள், ஜெப அட்டை எண் 1, 2 மற்றும் 7. ஜெப அட்டை எண் 1, 2 மற்றும் 7. மக்களே, உங்கள் அருகில் உள்ள யாரையாவது சுற்றிலும் பார்ப்பீர்களா? அவர்கள் இங்கே இருந்தால் அவர்களின் இடத்தை விட்டுவிட அனுமதிக்காதீர்கள். சரி, அது... அவர்கள் என்றால்... அது வெறுமனே, அவர்கள் தங்கள் இடத்தைத் தவறவிடுகிறார்கள், அநேகமாக எங்காவது வெளியே சென்றிருக்கலாம். சரி,

இப்போது நாம் நம் தலைகளைத் தாழ்த்துவோம், அனைவரும் மிகவும் அமைதியாக இருங்கள்.

அது சரிதான், சகோதரா. ஓ, தேவனே. அது என்னை எப்படி உணர வைக்கிறது என்று உங்களுக்குத் தெரியாது. எல்லாம் சாத்தியமே, விசுவாசியுங்கள்.

61 எங்கள் பரலோகப் பிதாவே, உமக்கு முன்பாக நாங்கள் தலைகளையும் இருதயங்களையும் தாழ்த்தியிருக்கிறோம். இது ஓய்வுநாள், இது உயிர்த்தெழுதலின் நாள். உமக்கு ஆராதனை செய்யவும், கர்த்தாவே, உமக்குக் காணிக்கை செலுத்தவும், தேசங்களிலுள்ள உம்முடைய பிள்ளைகளுக்கு ஊழியஞ்செய்ய நாளை வெளிநாடுகளுக்குச் செல்லும் எங்கள் சகோதரனுக்கு ஆசீர்வாதங்களை அளிக்கவும் இன்று நாங்கள் ஒன்றாகக் கூடியிருக்கிறோம். அஞ்ஞானிகளை எங்களுக்குத் தருவீர் என்று நீர் சொல்லியிருக்கிறீர். நீர் அதை எங்களுக்குத் தந்தருள வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

சகோதரர் ஜோசப் செல்லும்போது அவருக்கு ஒரு பங்கைத் தந்தருளும். இப்பொழுதும் கர்த்தாவே, இந்த நினைவு கூரும் இரவில், சபையை விட்டுச் செல்லும் போதகருக்காக... பவுல் ஒருமுறை இரவு முழுவதும் பிரசங்கித்தார், பின்பு வெளியே சென்று கடற்கரையில் முழங்கால்படியிட்டு, அங்கே அவர் கழுத்தைக் கட்டிக்கொண்டார். பிதாவே, நாங்கள் ஒருவரிலொருவர் தெய்வீக அன்புடன் அன்புகூருகிறோம். ஆகையால் அன்புள்ள பிதாவே, இந்த இரவிலே உம்முடைய மகா பிரசன்னம் இங்கே இருக்கவேண்டுமென்றும், சகோதரர் ஜோசப் ஒரு புதிய தரிசனத்துடன் வெளிநாட்டிற்குச் செல்வார் என்றும், அவர் அங்கே சென்று அந்த மக்களிடம், "ஓ, நான் புறப்பட்ட இரவில், கர்த்தராகிய இயேசு மக்களின் நடுவே தோன்றி, அவர் பூமியில் இருந்தபோது செய்த அதே காரியங்களைச் செய்தார்" என்று கூறுவார் என்றும் நாங்கள் ஜெபிக்கிறோம்.

ஓ, ஆசீர்வதிக்கப்பட்ட இரட்சகரே, உம்முடைய ஆவியும் உம்முடைய சத்தியமும் இந்தச் சிறிய மக்கள் கூட்டத்தின் மீது

தங்கியிருப்பதாக. இன்று இரவு இங்கே கூடியிருக்கும் அனைவரையும் ஆசீர்வதியும். இப்பொழுதும் பிதாவே, தகுதியற்ற ஏழையான உம்முடைய இந்த ஊழியக்காரனை எடுத்து, பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணும், கர்த்தராகிய இயேசு இந்த இரவில் கூட்டத்தினருக்குத் தம்மைத்தாமே மகா வல்லமையுடன் வெளிப்படுத்துவாராக. அனைவரும் விசுவாசித்து மகிழ்ச்சியுடன் செல்வார்கள், ஏனெனில் இதை அவருடைய நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

62 இப்போது, உங்களுக்கு விருப்பமானால், எனக்கு ஒரு சிறிய உதவி செய்யுங்கள். அனைவரும் மிகவும் அமைதியாக அமர்ந்து, கவனியுங்கள். இது என்னவென்று என் முழு இருதயத்தோடு உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், ஆனால் என்னால் முடியாது. இப்போது ஏதோ நடந்துவிட்டது.

நான்—நான் விரும்புகிறேன்... இதை நான் விளக்க முயற்சிக்க வேண்டிய அவசியமில்லை. யாருக்கும் அந்த அவசியமில்லை, உங்களால் அதைச் செய்ய முடியாது. ஏதோ

நிகழ்ந்திருக்கிறது. இந்த அறையிலுள்ள ஒவ்வொரு ஆவியும் அசைவாடிக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. காண்கிறீர்களா? அதை உங்களால் உணர முடியும். இங்கே கிறிஸ்தவ விசுவாசம் இருப்பதை நீங்கள் சொல்லலாம்.

தேவனை விசுவாசிக்கிற மக்கள் இருக்கிறார்கள். இன்றிரவு நேராக வெளியே நடங்கள்; குறையாகத் தாக்காதீர்கள்; தொடர்ந்து தாக்குங்கள். தொடர்ந்து விசுவாசித்துக்கொண்டே இருங்கள். நாம் இப்போது அவருடைய பிரசன்னத்தில் இருக்கிறோம். அவருடைய ஆசீர்வாதங்கள் வருவதாக.

சரி, சகோதரர் ஜோசப், மக்களில் ஒருவர் இவர்தானா? இப்போது, இங்கே நிற்கும் இந்த அம்மையாரை, எனக்கு—இந்தத் பெண்ணை எனக்குத் தெரியாது. நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்கள் என்று நினைக்கிறேன்; நாம் ஒருவரையொருவர் அறியோம்.

கர்த்தராகிய இயேசு இந்த மனுஷியை அறிவார், நான் அறியேன். ஆனால் உங்களைப்பற்றி அவர் எல்லாவற்றையும்

அறிந்திருப்பதுபோலவே, இவரைப்பற்றியும் அவர் எல்லாவற்றையும் அறிவார். இப்போது, இவரிடம் ஒரு நிமிடம் மட்டும் நான் பேசுவேன். சாத்தியமானால், உங்கள் அனைவருக்காகவும் நாங்கள் ஜெபிக்கும்படி, பார்வையாளர்கள், அதாவது மக்கள் வரிசையாக வருவதற்காக, இதைச் சற்று கவனியுங்கள்.

63 இங்கே ஒரு பெண் நிற்கிறார், முற்றிலும் முன்பின் தெரியாதவர். என் வாழ்க்கையில் இவரை நான் பார்த்ததே இல்லை. இப்போது, எதைப்பற்றி நான் ஒரு அறிக்கையை அளித்தேன்? முதலாவது, இந்த நாட்களில் இந்தக் காரியங்கள் செய்யப்படும் என்று கர்த்தருடைய வார்த்தை சொல்லியிருக்கிறது.

அடுத்தது, இதைச் செய்யப் போகும்படி என்னிடம் சொன்ன ஒரு தூதனை நான் சந்தித்தேன். அப்படியானால் நான் என்ன செய்வது? உணர்வதும் அறிவதும்—விளக்க முடியாது. ஆனால் ஏதோ நடந்துவிட்டது. இங்கே மேலிருந்து கீழே ஏதோ இறங்கியிருக்கிறது. அது மற்றொரு மண்டலம்.

அதை என்னால் விளக்க முடியாது; வேறு யாராலும் முடியாது.

ஆனால் இப்போது இங்கே ஒரு பெண் நிற்கிறார், நாமும் ஒருவரையொருவர் அறியோம் என்பதை அவள் அறிவாள். அவளைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. ஒருவேளை அவளுக்கும் என்னைப்பற்றி எதுவும் தெரிந்திருக்காது.

ஆனால் நாம் அந்நியர்கள், ஆனால் பரலோகத்தில் ஒரு தேவன் இருக்கிறார். அவர் அவளையும் அறிவார், என்னையும் அறிவார். அவள் எதற்காக இங்கே வந்திருக்கிறாள் என்பதை அவர் சரியாக அறிவார். அவள் இரட்சிக்கப்படுவதற்காக வரும் ஒரு பாவியாக இருக்கலாம். இப்போது, அவள் எவ்வளவு பாவம் செய்திருந்தாலும், எவ்வளவு அறிக்கை செய்திருந்தாலும், நான் அவளைச் சொல்ல— அவளை இரட்சிக்க முடியாது.

அவள் எனக்கு விரோதமாகப் பாவம் செய்திருந்தால், நான் அவளை மன்னிக்க முடியும், ஆனால் அவள் தேவனுக்கு

விரோதமாகப் பாவம் செய்திருந்தால், அதற்கு தேவன் ஒருவரே தேவை.

64 இப்போது, அவளுக்கு நான் அறிமுகப்படுத்தக்கூடிய ஒரு காரியம் இங்கே இருக்கிறது. அவள் ஒரு பாவியாக இருந்தால், அவள் விசுவாசித்தால் தேவன் அவளை மன்னித்திருக்கிறார். அது சரியா? எந்தவொரு மனிதனும் செய்யக்கூடியது அவ்வளவுதான்.

அவள் வியாதியாயிருந்தால், அவளை என்னால் குணமாக்க முடியாது. ஆனால், அவர் அவளை இரட்சித்ததைப்போலவே, கல்வாரியில் மரித்தபோது கிறிஸ்து அவளைக் குணமாக்கினார் என்று வேதத்தின் மூலமாக நான் அவளுக்குச் சொல்ல முடியும். அதுதான் நற்செய்தியா? அதுதானா, பரிசுத்தவான்களுக்கு முதன்முதலில் அளிக்கப்பட்ட விடுதலையாக இருந்தது?

இப்போது, அதுதான் வார்த்தை. பின்பு தேவன் உன்னதத்திற்கு ஏறி மனிதர்களுக்கு வரங்களை அளித்தார். இப்போது, வரங்கள் என்ன செய்கின்றன? அவற்றில் சிலர் முதலாவது அப்போஸ்தலர்கள், அதன்பின்பு

தீர்க்கதரிசிகள், போதகர்கள், சுவிசேஷகர்கள், அது சரியா?

அனைத்து வரங்களும் சபையில் வைக்கப்பட்டன, ஆரம்பத்தில் அது ஆதி சபையில் இருந்தது. இப்போது, இரண்டு வருடங்கள் இருளாக இருந்தது, அது மேற்கத்திய நாட்டில், இந்தக் கடைசி காலத்தில், ஆல்பாவும் ஒமேகாவுமாக இங்கே வெளியே வருகிறது.

65 இப்போது, பரிசுத்த ஆவியானவர் இங்கே இருந்தால், காணமுடியாத நபராக, அவர் இந்தப் பெண்ணை அறிவார், என்னை அறிவார். சமாரியப் பெண்ணைப் போல, கிணற்றருகில் இருந்த நபரைப்போல, பெண்ணைப்போல அவளிடம் சில நிமிடங்கள் பேசவும் சொல்லவும் அவர் என்னை அபிஷேகிக்க முடியும், மேலும் அவள் எதற்காக இங்கே வந்திருக்கிறாள் என்பதைச் சரியாக அவளுக்குச் சொல்ல முடியும்.

அப்பொழுது அந்தப் பெண் சொன்னாள்... வேதத்தின்படி இதுவே அவளுடைய சாட்சியாக இருந்தது. அவள் சொன்னாள், "அது

மேசியாவின் அடையாளம் என்று எனக்குத் தெரியும். மேசியா வரும்போது அவர்... ஆனால் நீர் யார்?" என்று அவள் சொன்னாள்...

அவர், "நானே அவர்" என்றார். இப்போது, நான் அவர் அல்ல, ஆனால் அவர் நம்மில் தம்மைத்தாமே வெளிப்படுத்தி, தாம் இருப்பேன் என்று சொன்னதைப்போலவே இங்கே இருக்கிறார் என்று அறிவிக்கும் அவருடைய ஊழியக்காரனாயிருக்கிறேன்: "உலகம் இனி என்னைக் காணாது, ஆனால் நீங்கள் என்னைக் காண்பீர்கள்.

நீங்கள் என்னைக் காண்பீர்கள், உலகத்தின் முடிவுபரியந்தமும் நான் உங்களுடனேகூட, உங்களுக்குள்ளும் இருப்பேன், நான் செய்த அதே காரியங்களைச் செய்து, வெளிப் படுத்துவேன். நான் நேற்றும், இன்றும், என்றென்றைக்கும் மாறாதவராயிருக்கிறேன்." இப்போது, நீங்கள் அனைவரும் புரிந்து கொள்கிறீர்களா? ஆமென்.

வரிசையில் உள்ள மக்களிடம் நான் பேசும்போது தேவன் உங்களை ஆசீர்வதிப் பாராக. நான் விரைவாகச் செயல்பட

முயற்சிப்பேன். தேவன் அதைச் செய்வாரானால்... நண்பரே, வேதம் அப்படிச் சொல்வதாலும், பரிசுத்த ஆவியானவர் இங்கே அதே காரியங்களைச் சொல்வதாலும், அடுத்து நகர வேண்டிய நேரம் உங்களுடையது என்று எனக்குத் தோன்றுகிறது. அது சரியா? ஜெபியுங்கள்; இந்தப் பக்கம் பாருங்கள்; விசுவாசியுங்கள். நான் உங்களை மீண்டும் சந்திக்கும் வரை தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

66 இப்போது, அம்மா, இவை எல்லாவற்றிலும் உங்களை நான் பகிரங்கமாக இங்கே நிற்க வைக்க விரும்பவில்லை. நீங்கள் மூக்குக்கண்ணாடி அணிந்திருப்பதை நான் காண்கிறேன், எனவே அது ஒரு காரியம், நிச்சயமாக அது தவறாக இருக்கும், உங்கள் கண்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆனால் நான்—நீங்கள் பேச வேண்டுமென்று நான் விரும்பவில்லை, நீங்கள் எனக்குப் பதிலளிக்க வேண்டும் என்று மட்டுமே நான் விரும்புகிறேன் (காண்கிறீர்களா?), எனக்குப் பதிலளிக்க மட்டும் வேண்டும்.

இப்போது, அங்கே...?.. நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்கள் என்பது, ஒருவரையொருவர் அறியோம் என்பது, எனக்குத் தெரிந்தவரை ஒருவரைப்பற்றி ஒருவருக்கு எதுவும் தெரியாது என்பது பார்வையாளர்கள் அனைவருக்கும் தெரிந்ததே.

இப்போது, இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். அவர்கள் அந்தக் காலத்தில் எடுத்த அந்தச் சிறிய புகைப்படத்தை நீங்கள் எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா, அதற்கு மேலே அந்த வெளிச்சம் இருந்தது, உங்களுக்குத் தெரியுமா, அதை, நான் நினைக்கிறேன், அதை நீங்கள் எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா?

இப்போது, என்னைப் பொறுத்தவரை அது நான் பிறந்தபோது எனக்குக் கொடுக்கப்பட்ட அடையாளம். நான் அதைச் சொன்னேன். அங்கே இருக்கலாம்... வேறொருவரின் சாட்சிக்கு என்னால் பதிலளிக்க முடியாது; என் சொந்த சாட்சிக்கு நான் பதிலளிக்க வேண்டும்.

காண்கிறீர்களா? பின்பு, அது தோன்றிய போது, அதற்குக் கீழே ஒரு மனிதர் இருந்தார். இதைச் செய்வதற்காக என்னை அனுப்பினவர்

அவரே. இது உண்மையாயிருந்தால், தேவனிடத்திலிருந்து வந்திருந்தால், அது தன்னைத்தானே நிரூபிக்கும். அது சரியா? இல்லையென்றால், சரி, அது செய்யாது.

என்னைப் பொறுத்தவரை அது—அது அவ்வளவு தூய்மையான ஒரு அடையாளமாக இருந்தது. பின்பு அறிவியல் உலகம் அதன் புகைப்படத்தை எடுத்தது. எனவே அது அறிவியல் உலகிற்கு அதைப்பற்றி அறியச் செய்கிறது. அது சபைக்கு அதைப்பற்றி அறியச் செய்கிறது.

தேவனுடைய ஆசீர்வாதங்கள், அப்படியானால் நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டாமா? உலகில் மிகவும் மகிழ்ச்சியான மக்கள், ஏனென்றால் இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, நம்முடன் இங்கே இருக்கிறார், பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புவிக்கப் பட்ட விசுவாசம்.

அது சத்தியம் என்று தேவனுடைய கிருபையினால் உறுதியாகப் பற்றிக்கொண்டு, அதற்காக நாங்கள் போராடுகிறோம். தொடரும் அடையா ளங்களுடன் தேவன் நம்மோடு

கிரியை நடப்பிக்கிறார். ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா?

67 நான் என்ன செய்கிறேன், இயேசு அந்தப் பெண்ணிடம் பேசும்போது, "எனக்குக் குடிக்கத் தா" என்று சொன்னதுபோல, உங்களிடம் பேசுகிறேன். ஏனென்றால் நாம் ஒருவரை யொருவர் அறியோம், எனவே உங்களுக்கு வேதவசனத்தை மேற்கோள் காட்டுவதையும், உங்களுக்கு ஏதாவது சொல்வதையும் தவிர என்னால் வேறு எதுவும் செய்ய முடியாது, தேவன் ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட வழியில் உங்களைப்பற்றி எனக்கு ஏதாவதொன்றைக் காண்பித்து, நீங்கள் எதற்காக அங்கே நிற்கிறீர்கள் என்பதை எனக்குச் சொன்னாலொழிய.

இது ஆச்சரியமாக இல்லையா? நீங்கள் அங்கே நிற்கிறீர்கள், எனக்கு உங்களைத் தெரியாது, உங்களுக்கு என்னைத் தெரியாது. ஆனால் நாம், தேவனுடைய பிரசன்னத்தில் இங்கே நிற்கிறோம்.

ஆனால் அவரிடமிருந்து உங்களுக்கு என்ன வேண்டும் என்பதை அவர் எனக்குச் சொல்ல

முடியும். உங்கள் இருதயம் என்ன என்பதை அவர் அறிந்திருந்து, அவரிடமிருந்து உங்களுக்கு என்ன வேண்டும் என்பதை அவர் எனக்குச் சொல்ல முடிந்தால், அப்படியானால் நீங்கள் நிச்சயமாகப் பெற்றுக்கொள்வீர்கள் என்று நீங்கள் உறுதியாக நினைத்தால், நீங்கள் நிச்சயமாக அவரை விசுவாசிக்க முடியும்.

அது சரியா? நீங்கள், நிச்சயமாக நான்—உங்கள் கண்களைப்பற்றி நான் பேசமாட்டேன் (காண்கிறீர்களா?), ஏனென்றால் அது, அவர்கள் பார்க்கிறார்கள், அது பார்க்கக்கூடிய காணக்கூடிய ஒன்று. (காண்கிறீர்களா?) ஆனால் இப்போது, நீங்கள் பதற்றமாக இருக்கிறீர்கள், கலக்கமடைந்திருக்கிறீர்கள், ஏனென்றால் நீங்கள் ஏதோவொன்றைப்பற்றி மிகவும் சோர்வாக இருக்கிறீர்கள். நீங்கள் கவலைப்படுகிறீர்கள்...

அது ஒரு... நான் ஒரு—ஒரு மனிதரைக் காண்கிறேன். அது தசைகளில் ஒருவித விறைப்பு அல்லது அதுபோன்ற ஒன்று. அது ஒரு மாமனார் அல்லது அதுபோன்ற ஒருவர், உங்களுக்கு நெருக்கமான ஒருவர். அது சரிதான், மூட்டுவலி அல்லது தசைகளில் ஏற்படும்

ஒருவிதமான விறைப்புத்தன்மை. இது ஒரு உறவினர், உங்கள் மாமனார்.

பின்பு அங்கே ஒரு... நான் வேறு ஒருவரைக் காண்கிறேன். அது ஒரு படுக்கை நோயாளி. அது ஒரு—அது ஒரு மோசமான நிலை; அது மருத்துவர்கள்... அது ஒரு புற்றுநோய் என்று அவர் சொன்னார் என நம்புகிறேன்.

பின்பு சில வகையான, கட்டிகள் போன்ற ஒன்று, அல்லது ஹாட்ஜ்கின்ஸ், ஹாட்ஜ்கின்ஸ். இதோ இங்கே அந்தப் பெண் இருக்கிறாள். அது... அங்கே படுத்திருக்கும் அந்த மகள் நீங்கள் தான். செல்லுங்கள், உங்கள் கையை அவள் மீது வையுங்கள், பின்பு அவளை வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள்.

பிதாவே, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவளுடைய வேண்டுதலின் மீது இப்போது உம்முடைய இரக்கங்கள் தங்கியிருப்பதாக. ஆமென். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

68 விசுவாசமாயிருங்கள். இப்போது, உங்கள் முழு இருதயத்தோடும் தேவனை விசுவாசிக்கிறீர்களா? பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம். என்னுடையது அல்ல... தேவன் உங்களுக்கு என்ன சொல்கிறாரோ, உங்கள் விசுவாசம். இப்போது விசுவாசியுங்கள்.

இது, நீங்கள்... உங்கள் கையில் உள்ள புத்தகங்களில் ஒன்று உங்களிடம் இருப்பதை நான் காண்கிறேன். சிறிய புத்தகம் ஒரு பெரிய காரியத்தைச் செய்திருக்கிறது. அது மக்களை ஆசீர்வதித்திருக்கிறது. அதை வாசிப்பது. நம்முடைய கர்த்தர் ஒரு ஆச்சரியமானவர், அல்லவா?

மிகவும் அற்புதம். இப்போது, அம்மா, நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்கள். நாம் ஒருவரையொருவர் அறியோம். கர்த்தராகிய இயேசு நம் இருவரையும் அறிவார், அல்லவா? அவர் நம் இருவரையும் அறிவார். இப்போது, இது கிணற்றருகே இருந்த பெண்ணிடம் இயேசு சொன்னதற்கு ஒரு முழுமையான உதாரணம்.

நாம் ஒரே இரத்தமாக இருந்தாலும், ஆனால் இரண்டு வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவர்கள்: ஒருவர் ஆங்கிலோ-சாக்சன், மற்றொன்று நிறத்தவர் இனம், ஒரு வெள்ளை இனம், மற்றொன்று நிறத்தவர் இனம்.

69 ஆனால் அவர் கிணற்றருகே இருந்த பெண்ணிடம் பேசியபோது. காண்கிறீர்களா, அவள் ஒரு சமாரியப் பெண்; "யூதர்களாகிய நீங்கள் சமாரியர்களாகிய எங்களிடம் கேட்பது வழக்கமல்ல" என்று அவள் சொன்னாள். ஏனென்றால் சமாரியர்களை விடத் தாங்கள் மேலானவர்கள், அவர்கள் தாழ்ந்தவர்கள் என்று யூதர்கள் நினைத்தார்கள்.

காண்கிறீர்களா, இனம் சார்ந்தது. ஆனால் தேவன் ஆவியிலே ஆராதிக்கிறவர்களையே தேடுகிறார் என்பதை இயேசு உடனடியாக அவளுக்குத் தெரியப்படுத்தினார். தேவன், ஒரே இரத்தத்தினாலே எல்லா மனிதர்களையும், வெள்ளை மனிதன், கறுப்பு மனிதன், மஞ்சள் மனிதன், பழுப்பு மனிதன்; அவர்கள் அனைவரையும் ஆதாம் என்ற ஒரு மனிதனிலிருந்து படைத்தார்.

அதன் மூலமாக உங்கள் தந்தை வந்தார்; அதன் மூலமாக என் தந்தை வந்தார்; அதன் மூலமாக வீழ்ச்சி வந்தது; கிறிஸ்துவின் மூலமாக நம் இருவருக்கும் மீட்பர் வந்தார். அது சரிதான், அல்லவா? நாம் இங்கே ஒருவருக்கொருவர் அந்நியர்களாயிருந்து, ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டு...

இப்போது, கடந்து சென்ற கடைசிப் பெண் ஒரு வெள்ளைப் பெண் என்று நான் நம்புகிறேன், அது அப்படியா, அல்லது வேறு ஏதாவதா? அது ஒரு வெள்ளைப் பெண் என்று நான் நம்புகிறேன். இப்போது, அது வெள்ளைக்காரர்களாகிய உங்களுக்கு ஒரு அடையாளமாக இருந்தது. தேவன் அதை அளிப்பாரானால், இங்கே அது கறுப்பினத்தவர்களுக்கு இருக்கும். அவர் அதை அளித்தருளுவாராக.

70 இப்போது, நம்முடைய கர்த்தர் கிணற்றருகில் இருந்த பெண்ணிடம் பேசியதுபோல நான் உங்களிடம் பேசிக் கொண்டிருந்தால்... பின்பு அவர் அவளுடைய பிரச்சனை எங்கே இருக்கிறது என்பதைக்

கண்டுபிடிக்கும் வரை அவளிடம் பேசினார். பின்பு அவர் அவளிடம் அவளுடைய பிரச்சனை எங்கே இருக்கிறது என்று சொன்னார், ஒரே ஒரு காரியம், "போய் உன் புருஷனை அழைத்து வா" என்றார்.

"எனக்கு புருஷன் இல்லை" என்றாள்.

"உனக்கு ஐந்து பேர் இருந்தார்கள்" என்றார்.

"நீர் ஒரு தீர்க்கதரிசி, ஆனால் மேசியா அந்த காரியங்களைச் செய்வார் என்று நாங்கள் அறிவோம்" என்று அவள் உடனடியாகக் கூறினாள்.

71 இப்போது, அவர் திரும்பி, அவருடைய எளிய ஊழியக்காரனாகிய என் மூலமாக உங்களுக்குத் தம்மைத்தாமே வெளிப்படுத் துவாரானால், உங்கள் வேண்டுதலை உங்களுக்கு அளிக்க அவர் இங்கே இருக்கிறார் என்று நீங்கள் விசுவாசிப்பீர்கள், அல்லவா?

எனக்கு முன்பாக ஒரு படம் நிற்பதை நான் காண்கிறேன். அது ஒரு—ஒரு உதரவிதானத் தைப்பற்றியது, இல்லை, அது ஒரு

பெருங்குடல், பெருங்குடல் பாதிப்பு. அதுதான் உங்களுக்கு இருக்கிறது, ஒரு பெருங்குடல் பாதிப்பு. நீங்களும், அவர் சொன்னார், "ஒரு நீர்க்கட்டி." உங்களுக்கு ஒரு நீர்க்கட்டி இருக்கிறது.

இப்போது, நீங்கள் வேறு ஒருவர் மீது மிகவும் அக்கறை கொண்டிருக்கிறீர்கள். அந்த நபர் மருத்துவமனையில் இருக்கிறார். அந்தப் பெண்ணுக்கு புற்றுநோய் இருக்கிறது. அது உங்கள் சகோதரி. பின்பு நீங்கள்—நான் ஜெபிப்பதற்காக ஒரு கைக்குட்டையை வைத்திருக்கிறீர்கள்.

அது இப்போது உங்கள் கையில் இருக்கிறது. ஆனால் அது உங்கள் கையில் இல்லை. சமீபத்தில் நீங்கள் வந்தபோது, அதை நீங்கள் கடிதத்திலிருந்து வெளியே எடுத்தீர்கள், அதை அவளிடம் கொண்டு செல்ல அனுப்புவதற்காக அது ஏற்கனவே கட்டப்பட்டுள்ளது.

கைக்குட்டையின் மீது நான் ஜெபித்து அவளிடம் கொடுப்பதற்காக நீங்கள்

கைக்குட்டையை என்னிடம் கொண்டு வந்தீர்கள். அதை என்னிடம் கொடுங்கள்.

பிதாவாகிய தேவனே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், இந்தக் காரியங்களை வாக்குத்தத்தம் செய்தவரான, உயிர்த்தெழுந்த, கர்த்தராகிய இயேசு ஆசீர்வதிக்கப்படுவாராக, அவைகள் செய்யப்படுவதைக் காண இன்றிரவு நாங்கள் உயிருடன் இருக்கிறோம்.

இந்தக் கைக்குட்டை யாரைக் குறிக்கிறதோ, அவளுக்காக நிற்கிறவரையும் நான் ஆசீர்வதிக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவர்கள் குணமடைவார்களாக. ஆமென். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. செல்லுங்கள், அவருடைய இரக்கங்கள் உங்களுடனே இருப்பதாக. ஆமென்.

நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு! இப்போது பயபக்தியுடன் இருங்கள், தயவுசெய்து.

72 அந்த வெளிச்சம் நகர்வதை நான் காண்கிறேன்; இங்கே குழந்தையுடன்

அமர்ந்திருக்கும் இந்தப் பெண்ணுக்குப் பின்னால் அது நிற்கிறது. அது திருமதி. சிம்ஸின் மகள் என்று நான் நம்புகிறேன்; நான்... அது நிற்கிறது, இல்லை, அது ஒரு மனிதரின் மீது இருக்கிறது.

அந்த மனிதர் வெளியூரிலிருந்து வந்தவர். அவர் மினசோட்டாவிலிருந்து வந்தவர். உங்களுக்கு நெஞ்சு வலி இருக்கிறது, அல்லவா, ஐயா? அது சரிதான். எனது கூட்டங்களில் நீங்கள் கலந்துகொள்வது இதுவே முதல் முறை. அது சரிதான், அல்லவா?

நான் உங்களுக்கு ஒரு அந்நியன்; ஒருவரையொருவர்—ஒருபோதும் பார்த்ததில்லை. அது உண்மைதான். சரி, நீங்கள் இப்போது குணமடைய வீட்டிற்குச் செல்கிறீர்கள், ஐயா. உங்கள் விசுவாசம் உங்களைக் குணமாக்கியது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

நான் என் விரலைக் காட்டும் இடத்திற்கு நேராகப் பின்னால் அமர்ந்திருக்கும் அந்தச் சிறிய பெண், இரண்டாவது பெண், பக்கவாட்டில் சுற்றிப் பார்த்தபடி அமர்ந்திருக்கிறாள்; அவள் வலிப்பு நோயால்

அவதிப்படுகிறாள். அவள் விழுவதை நான் காண்கிறேன். நீங்கள் குணமடைய விரும்புகிறீர்களா, அம்மா? எழுந்து நின்று இப்போது உங்கள் சுகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். கர்த்தராகிய இயேசு... இந்த நேரத்தில் அது உங்களை விட்டு நீங்கிவிட்டது; ஒரு இருண்ட வட்டம் உங்கள் மேல் தொங்கிக்கொண்டிருந்தது, ஆனால் இப்போது அது போய்விட்டது. மகிழ்ச்சியுடன் வீட்டிற்குச் செல்லுங்கள். அது இனி ஒருபோதும் வரக்கூடாது என்பதே என் ஜெபம்.

73 நான் சொல்வது புரிகிறதா? விசுவாசமாயிருங்கள்! தேவனுடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவை விசுவாசியுங்கள். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா, அம்மா? உங்கள் முழு இருதயத்தோடும் தேவனை விசுவாசிக்கிறீர்களா? எனக்கு உங்களைத் தெரியாது, ஆனால் அவர் அறிவார்.

நீங்கள் எதற்காக அங்கே இருக்கிறீர்கள் என்பதை தேவன் எனக்குத் தெரியப்படுத்தினால், நீங்கள் விசுவாசிப்பீர்களா? நீண்ட காலமாகக் உங்களுக்கு ஒரு பாதிப்பு இருந்தது, அந்த

நேரத்தில் மிகவும் இளையவளாக, மிகவும் இலேசாக இருந்தது.

உங்கள் பாதிப்பு காணப்படாத ஒன்று; அது மூக்கில் இருக்கிறது. அது உங்கள் மூக்கில் உள்ள வளர்ச்சிகள். அது அந்த நிலைக்கு வந்துவிட்டது, அதனால் அது—நீங்கள் வாசனை உணர்வை இழந்துவிட்டீர்கள். உங்களால் வாசனையை நுகர முடியாது.

அது உண்மைதான். இயேசு உங்களைக் குணமாக்கினார் என்று நீங்கள் விசுவாசிக் கிறீர்களா? நீங்கள் விசுவாசிப்பீர்கள் என்பதற்கான வழி இதோ, நான் என் கைகளை உங்கள் மீது வைத்தால். இங்கே வாருங்கள்.

அன்பான பரலோகப் பிதாவே, நம்முடைய கர்த்தரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, என் கைகளை உங்கள் மீது வைக்கிறேன், சகோதரியே, இந்தப் பிசாசைக் கண்டிக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அது அவளை விட்டு வெளியேறிப் போகக்கடவது. இயேசுவின் நாமத்தில் அவள் சுகமடைவாளாக. ஆமென். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக,

சகோதரியே, விசுவாசித்து, மகிழ்ச்சியுடன் செல்லுங்கள்.

74 உங்கள் முழு இருதயத்தோடும் அவரை விசுவாசிக்கிறீர்களா, சகோதரியே? உங்களுக்கு ஒரு அந்நியனாகிய நான்... தேவனுக்கு மட்டுமே தெரியும். நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கும் ஒருவர் உங்களுக்கு இருக்கிறார். நீங்களே மிகவும் பதற்றமாக இருக்கிறீர்கள்;

அதனால்தான் நீங்கள் அவதிப்படுகிறீர்கள். உங்களுக்கு ஒரு நரம்புத் தளர்ச்சி இருக்கிறது, அது உங்களைக் கலக்கமடையச் செய்கிறது. நீங்கள் கவலைப்படுவதை நான் காண்கிறேன். அது ஒரு பையனா? ஒரு கண்ணுடன், மற்றும் ஒரு பெண். அந்தப் பெண் ஒரு மருத்துவருக்கு முன்பாக இருப்பதை நான் காண்கிறேன்.

அந்த மருத்துவர் அந்தப் பெண்ணுக்கு ஒரு அறுவை சிகிச்சைக்காக ஒரு நேரத்தைக் குறித்திருக்கிறார். அந்த அறுவை சிகிச்சைக்காக அடுத்த வாரம் வியாழக்கிழமை, இந்த மே மாதத்தில் அது வருகிறது. நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? சர்வவல்லமையுள்ள

தேவனே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், கேட்கப்பட்ட ஆசீர்வாதத்தை அளித்தருளும்.

குணமாக்குவதற்காக இப்போது பிரசன்ன மாகியிருக்கும் உம்முடைய சர்வவல்லமையுள்ள வல்லமை, இயேசுவின் நாமத்தின் மூலமாக அது அளிக்கப்படுவதாக, ஆமென். தேவன் ஆசீர்வதிப்பாராக. தேவனே, இரக்கமாயிரும், என் ஜெபம். ஓ, ஆச்சரியம். எவ்வளவு அற்புதம்.

நம்முடைய கர்த்தர் குணமாக்குவதற்கு இருதய நோய் ஒன்றும் இல்லையே, அல்லவா? நீங்கள் அப்போதே குணமடைந்துவிட்டீர்கள் என்று விசுவாசிக்கிறீர்களா? சிறுநீரகப் பிரச்சனையும் உங்களுக்கு இருந்தது, அல்லவா? அது இப்போது உங்களை விட்டு நீங்கிவிட்டது. ஆமென்.

அந்தப் பெண்ணை தேவன் குணமாக்கி, சுகமாக்க முடியும் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அவளுக்கு இப்போது பத்தொன்பது வயது. சுமார் நான்கு வயதுக் குழந்தையின் மனதைக் கொண்டிருக்கிறாள்

என்று மருத்துவர்கள் கூறினார்கள், ஆனால் அவள் சுகமடைவாள் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்.

உங்கள் கைக்குட்டையை என்னிடம் கொடுங்கள். கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் தேவனே, இந்தப் பெண்ணின் வேண்டுதலை இயேசுவின் நாமத்தில் அளித்தருளும். சாத்தானே, அந்தக் குழந்தையை விட்டுவிடு. விசுவாசத்தினால், ஜீவனுள்ள தேவனுடைய நாமத்திலும், தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலும், நீ அவளை விட்டுவிட வேண்டும் என்று நாங்கள் உனக்குக் கட்டளையிடுகிறோம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரியே.

75 வாருங்கள், அம்மா. உங்களுக்கான அந்தப் பெண்ரீதியான பிரச்சனையை தேவன் குணமாக்கி, உங்களைச் சுகமாக்குவார் என்று விசுவாசிக்கிறீர்களா? உங்கள் முழு இருதயத்தோடும் அதை விசுவாசிக்கிறீர்களா?

இப்போது அதை ஏற்றுக் கொள்கிறீர்களா? சாத்தானே, அந்தப் பெண்ணிடமிருந்து விலகிவா, இயேசுவின் நாமத்தினால் நாங்கள்

உனக்குக் கட்டளையிடுகிறோம், அவளை விட்டுவிடு. ஆமென். சந்தேகப்பட வேண்டாம். விசுவாசியுங்கள்.

சிறிது நேரத்திற்கு முன்பு நீங்கள் எனக்கு முன்பாக இங்கே கீழே அமர்ந்திருந்தபோது. திடீரென்று, நான் பிரசங்கிக்கையில், உங்களுக்கு உண்மையில் ஒரு விசித்திரமான உணர்வு ஏற்பட்டது. நீங்கள் உங்கள் தலையைச் சற்று பின்னால் சாய்த்தீர்கள்.

நீங்கள் அப்படிச் செய்தபோது, உங்களுக்கு இருந்த அந்த முதுகுவலியிலிருந்து தேவன் உங்களைக் குணமாக்கினார். இப்போது, நீங்கள் மகிழ்ச்சியுடன் உங்கள் வழியில் சென்று சுகமடையலாம்.

76 வாருங்கள். சகோதரியே, அந்தக் கட்டிக்கு ஒரே ஒரு நம்பிக்கைதான் இருக்கிறது, அது இயேசு கிறிஸ்துவின் மூலமாகவே. விசுவாசியுங்கள். அன்பான பரலோகப் பிதாவே, கைகளை வைத்து, பரலோகத்திலுள்ள தேவன் இந்தப் பிசாசைக் கடிந்துகொள்வார் என்று கேட்கிறேன். கர்த்தராகிய இயேசுவே, பாவம் இந்தச் சிறிய பெண் அங்கே விசுவாசத்துடன்

வெளிவர முயற்சித்தாள், தோற்றத்தில், அவளால் அதைத் தன்வசமாக்கிக்கொள்ள முடியவில்லை.

ஆனால் நான் என் விசுவாசத்தை அவளுடன் இணைக்கிறேன். இப்போது இந்த முழு சபையுடனும், இயேசு மரித்து மீண்டும் உயிர்த்தெழுந்தார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். சாத்தானே, நாங்கள் உன்னைக் கண்டிக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவளுடைய உயிரை நாங்கள் கோருகிறோம். இப்போது உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள். ஆமென்.

உங்கள் சுகத்தைப் பெற்றுக்கொள்ள அது ஒரு நல்ல வழியாகும். இப்போது நான் சொல்வது உங்களுக்கு நன்றாகக் கேட்கிறது. உங்கள் மூட்டுவலியும் போய்விட்டது;

உங்கள்—உங்கள் காது கேட்கும் கருவி வெளியே இருக்கிறது. நீங்கள் சுகமாயிருக்கிறீர்கள், எனவே நீங்கள் மகிழ்ச்சியுடன் செல்லலாம். "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!" என்று சொல்வோம்.

77 சரி, அம்மா, நான் அங்கே அமர்ந்திருந்த அந்தப் பெண்ணிடம் அவளுடைய முதுகு வலியைப் பற்றிப் பேசியபோது, உங்களுடையதும் அதே நேரத்தில் நீங்கிவிட்டது. எனவே நீங்களும் குணமடைந்துவிட்டீர்கள். "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோம்.

இருதய நோயைக் குணமாக்குவதும் சுகமாக்குவதும் தேவனுக்கு மிகவும் எளிதானது; அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்கள், அல்லவா? ஆமென். பரலோகப் பிதாவே, என் சகோதரிகளாகிய இவர்களைக் கட்டியிருந்த பிசாசுகளை இயேசுவின் நாமத்தில் நான் கண்டிக்கிறேன். பிசாசே, இப்போது வெளியே வா, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்தப் பெண்களை விட்டுவிடு. ஆமென். இப்போது மகிழ்ச்சியுடனும் சந்தோஷத்துடனும், "தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்லிக் கொண்டே செல்லுங்கள்.

நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? விசுவாசமா யிருங்கள். நீங்கள் விசுவாசித்தால், எல்லாம் கூடும் என்று இயேசு சொன்னார். கைகளைக் கட்டிக்கொண்டு, தேவன் அந்தக் குறைந்த

இரத்த அழுத்தத்தை உங்களை விட்டு நீக்கி, உங்களை உண்மையாகவே சுகமுள்ள மனிதராக்குவார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா, ஐயா?

நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அதை ஏற்றுக் கொள்கிறீர்களா? பின்பு உங்கள் கால்களில் எழுந்து நின்று, "இயேசுவே, நான் உம்மை விசுவாசிக்கிறேன்" என்று சொல்லுங்கள். ஆமென். அப்படிதான் அதைச் செய்ய வேண்டும். அவர் அற்புதமானவர் அல்லவா?

78 நான் உங்களை அறிவேன், ஐயா. கட்டங்கள் போட்ட டை அணிந்து அங்கே அமர்ந்திருக்கும் உங்கள் பெயர் எனக்குத் தெரியாது. எனக்காக ஒரு உதவி செய்வீர்களா? முழுவதும்... உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா? அங்கே உங்களுக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கும் அந்தப் பெண்ணின் மீது உங்கள் கைகளை வையுங்கள், அந்த மூட்டுவலியிலிருந்து இயேசு அவளைக் குணமாக்கி, அவளைச் சுகமாக வீட்டிற்குச் செல்லச் செய்வார்.

பரலோகப் பிதாவே, இயேசுவின் நாமத்தில், இந்தத் தரிசனத்தில் நீர் காண்பித்த அங்கே அமர்ந்திருக்கும் அந்தப் பெண்ணைக் குணமாக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். அவள் வீட்டிற்குச் சென்று, இனி முடமாகாமல் இருக்க, இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்.

ஓ, நான் அவரை நேசிக்கிறேன். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அவளுக்காக நான் ஜெபித்த அதே நேரத்தில் நீங்களும் அதிலிருந்து விடுபடலாம் என்று நீங்கள் என்ன நினைத்தீர்கள்? ஆமென். நீங்கள் விசுவாசித்தது போலவே செல்லுங்கள், பெற்றுக்கொள்ளுங்கள். "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோம். ஓ, அவர் அற்புதமானவர் அல்லவா?

79 ஊதா நிற ஆடை அணிந்து இங்கே அமர்ந்திருக்கும் இந்தச் சிறிய பெண், முதுகுவலியால் அவதிப்பட்டு அங்கே அமர்ந்திருக்கிறீர்கள், நீங்கள். இயேசு உங்களைக் குணமாக்கினார் என்று விசுவாசிக்கிறீர்களா? அது... இப்போதே அது வித்தியாசமாக உணரவில்லையா?

உங்கள் கையை அசைக்கவும்; எழுந்து நின்று உங்கள் கையை அசைக்கவும். அது சரியென்றால் மீண்டும் எழுந்து நின்று உங்கள் கையை உயர்த்தவும். உங்கள் முதுகை முன்னும் பின்னும் அசைக்கவும். இதோ, நீங்கள் இருக்கிறீர்கள்; அது முழுவதும் போய்விட்டது. காண்கிறீர்களா? காண்கிறீர்களா, உங்கள் விசுவாசம் அதைச் செய்தது. அல்லேலூயா. ஓ, நான் அவரை நேசிக்கிறேன்!

80 அங்கே கீழே அந்த இரட்டை குடலிறக்கத்துடன் இருப்பதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? தேவன் உங்களைச் சுகமாக்குவார் என்று விசுவாசிக்கிறீர்களா, ஐயா? சரி, நீங்கள் அதை விசுவாசித்தால் அதைப் பெற்றுக்கொள்ளலாம். ஆமென். தேவன் அற்புதமானவர்.

உங்கள் முழங்கால்களில் உள்ள அந்தப் பிரச்சனையுடன் அங்கே அமர்ந்திருப்பதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? தேவன் உங்களைச் சுகமாக்குவார் என்று விசுவாசிக் கிறீர்களா? நீ

ங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? உங்கள் கால்களில் எழுந்து நில்லுங்கள்; உங்கள் முழங்கால்களை மேலுங்கீழுமாக உயர்த்தவும். இயேசு கிறிஸ்து உங்களைச் சுகமாக்குகிறார். ஆமென். இதோ அவர் இருக்கிறார், பூரணமான அற்புதம். அவருடைய விசுவாசம் அதைச் செய்தது. அல்லேலூயா.

அங்கே உங்களுக்குப் பக்கத்தில் உள்ள அந்தப் பெண்ணின் மீது உங்கள் கையை வையுங்கள், அப்போது அவள் மூட்டு வலியிலிருந்து குணமடையலாம். ஆமென். சரி, அம்மா, உங்கள் கால்களில் எழுந்து நில்லுங்கள். இயேசு கிறிஸ்து உங்களைக் குணமாக்கினார்; இதோ நீங்கள் இருக்கிறீர்கள், அது போய்விட்டது.

இப்போது, உங்களுக்கு அடுத்ததாக கண் பார்வையிழந்து வரும் விழியிறுக்கப் பிரச்சனை யுடன் இருக்கும் அந்தப் பெண்ணின் மீது உங்கள் கையை வையுங்கள், உங்களுக்கு மறுபக்கத்தில் இருக்கும் அந்தப் பெண், அங்கே அமர்ந்திருக்கும் நிறத்தவர் இனத்தைச் சேர்ந்த பெண், முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள்,

அம்மா. ஆமென். அதை விசுவாசியுங்கள், நீங்கள் அதைப் பெறலாம். அல்லேலூயா. கர்த்தராகிய இயேசு இங்கே இருக்கிறார். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா?

81 நாம் ஒவ்வொருவரும், இப்போதே நம் கால்களில் எழுந்து நிற்போம். நம் கைகளை உயர்த்துவோம்; அவருக்குத் துதிகளைச் செலுத்துவோம்.

பரலோகப் பிதாவே, தேவனுடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில், இந்தக் கைக்குட்டைகளை நான் ஆசீர்வதிக்கிறேன்; இந்த மக்களை இப்போதே நான் ஆசீர்வதிக்கிறேன். பரிசுத்த ஆவியானவர் அவர்கள் ஒவ்வொருவரையும் சுகமாக்குவாராக.

நான் பிசாசைக் கண்டிக்கிறேன். பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புவிக்கப் பட்ட விசுவாசம் இங்கே இருக்கிறது, மக்கள் சத்தமிட்டு தேவனைத் துதித்தார்கள். மக்களே, நீங்கள் விடுவிக்கப்பட்டீர்கள்.

பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம் உங்களிடம் கொண்டு

வரப்பட்டிருக்கிறது; நீங்கள் சுதந்திரவாதிகள்! கதவு திறந்திருக்கிறது; தேவன் உங்களுக்கு அளித்த விடுதலையைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். ஆமென். இயேசுவின் நாமத்தில்.

